# கிறிஸ்தவர்கள் மத்தியில் காட்டப்படும் பரிவு (1 தீமோத்தேயு 5:1–6:2)

*"அவர்கள் [விதவைகள்] குற்றசாட்டப்படாதவர்களாயிருக்கும் படி இவைகளைக் கட்டளையிடு" (1 தீமோத்தேயு 5:7).*

உண்மை நிறைந்த நடத்துவத்துவத்துடன் (1 தீமோ. 3) வசனத்தின் பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களால் (1 தீமோ. 4) செய்யப்படும் ஊக்கமான ஊழியம் சபைக்குள் ஆத்துமாக்களின் அறுவடையைக் கொண்டு வரும் என்பதைப் பவுல் அறிந்திருந்தார். தேவனுடைய குடும்பத்திற்குள் இசைவை காப்பாற்றுதலும் தேவைகளைச் சந்தித்தலுமே வளரும் சபைகளுக்கான அடுத்த சோதனையாய் உள்ளது. எருசலேமில் சபை தொடங்கப்பட்ட பொழுது இதுதான் நடைபெற்றது. அப்போஸ்தலர்களின் தகுதி வாய்ந்த நடத்துவத்துவத்தினாலும் ஒப்புக் கொடுத்த ஊழிய முயற்சிகளினாலும் சீஷர்களின் தொகை பெருகிற்று (அப். 2:41, 47; 5:14; 6:1). இருப்பினும் மனித உறவுகள் உடைந்து போய் முறுமுறுப்புகள் தோன்றின (அப். 2:46, 47; 6:1-5). சுவிசேஷ ஊழியமே பயமுறுத்துதலுக்கு உட்பட்டது.

இப்படிப்பட்ட மாதிரி ஒன்றின் உண்மை நிலையையும் அபாயத்தையும் உணர்ந்தறிந்த பவுல், சகோதரர்கள் ஒருவர் மற்றவருடன் நன்கு உறவுபட்டு நிற்பதை உறுதிப்படுத்தும் ஞானமிக்க வழிகாட்டுதல்களை 1 தீமோத்தேயு 5:1-6:2ல் கொடுத்தார். அவர் வயது வித்தியாசங்கள் (5:1, 2) மற்றும் விதவைகளுக்கான விசேஷித்த தேவைகள் (5:3-16) ஆகியவை பற்றிய சிந்தை நிறைந்தவராய் இருந்தார். மேலும் அவர், உறுப்பினர் - கண்காணிகளுக்கிடையில் தக்க உறவுமுறைகள் (5:17-25) பற்றி குறிப்பிட்டு, தீமோத்தேயு தம்மைப் பொருத்தமானவராகக் காத்துக் கொள்ளும்படியான வேண்டுகோளையும் இடைச் செருகினார் (5:23). பிறகு அவர், அடிமை - எஜமானர் உறவுகள் (6:1, 2)[1] போன்ற சமூகப் பிரச்சனைகளுடன் சமானப்படுகின்ற கிறிஸ்தவக் கொள்கைகளுக்கான அறிவுறுத்தல்களைக் கொடுத்தார்.

சரீரத்தில் (சபையில்) சுவிசேஷ ஊழிய முயற்சிகளை கீழ்ப்படுத்தக் கூடிய சபைக்குழுமத்தின் உள்ளான ஊழியங்களைப் பவுல் முன்னதாகவே அறிந்திருந்தார். பவுல் எழுதியவற்றை இன்றைய நாட்களில் சகோதரர்கள் கவனித்துப் பின்பற்றினால் பல பிரச்சனைகளைத் தவிர்க்க முடியும்.

## பாடம் 14: எல்லா வயதினருக்குமான பரிவு (5:1, 2)

### பரிவு காட்டுதலுக்கான அவரது அழைப்பு (வ. 1, 2)

“முதிர் வயதுள்ளவனைக் கடிந்து கொள்ளாமல், அவனைத் தகப்பனைப் போலவும், பாலிய புருஷரைச் சகோதரரைப் போலவும், முதிர் வயதுள்ள ஸ்திரீகளைத் தாய்களைப் போலவும், பாலிய ஸ்திரீகளை ... சகோதரிகளைப் போலவும் பாவித்து, புத்தி சொல்லு” (5:1, 2) என்று கூறியதன் மூலம் பவுல், தேவனுடைய குடும்பத்தில் கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவர் மீது அக்கறை கொள்பவர்களாய் இருக்கும்படி தமது அழைப்பைத் தொடங்கினார். பவுல் அளித்த இந்த ஆலோசனைகள், இன்றைய நாட்களில் இளைஞர்களுக்கு அளவுக்கதிகமான முக்கியத்துவம் கொடுத்து அதனால் முதியவர்களுக்கு மதிப்புச் செலுத்தக் குறைவுபடும் கலாச்சாரங்கள் சிலவற்றுக்கு ஏற்புடையவைகளாக உள்ளன.[2] வயது முதிர்ந்தவர்கள் எப்பொழுதுமே சரியாக இராது போகையிலும், அவர்கள் எப்பொழுதுமே மதிப்பளிக்கப்பட வேண்டும். பவுலின் மூலமாகக் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதல்கள் எல்லா இடங்களுக்கும் மற்றும் எல்லா மக்களுக்கும் நடைமுறைக்குரியவைகளாய் உள்ளன.

முதிர்வயதுள்ளவர்களால் (செய்யப்படும்) தவறுகள் பவுலினால் முன்னதாகவே உணர்ந்தறியப்பட்டிருப்பதாகக் காணப்படுகிறது, ஏனெனில் “முதிர் வயதுள்ளவரைக் கடிந்து கொள்ளக் கூடாதென்று”[3] அவர் வேண்டுகோள் விடுத்தார். முதிய சகோதரர்கள் தவறு செய்ய முடியா தென்றால், பவுல் அவர்களைக் கடிந்து கொள்ளக் கூடாதென்ற கருத்தைப் பற்றிச் சிந்தித்திருக்கவே மாட்டார். இருப்பினும், ஒரு தவறின் முன்னிலை யில் கூட முதிய கிறிஸ்தவரை “வார்த்தைகளால் தாக்குதல்” அல்லது ஒரு முதிய நபரைக் கடிந்து கொண்டு திருத்துதல் என்பது ஒரு இளம் நபருக்கு ஏற்புடையதல்ல என்பது இங்கு மறைமுகமாய்க் குறிப்பிடப்படுகிறது. தவறு செய்கிறவரை கடிந்து கொள்வதற்கு மாறாக, “தகப்பனைப் போல பாவித்து புத்தி சொல்லும்படி”[4] பவுல் கூறினார்.

ஒரு தகப்பனிடம் நடந்து கொள்வது போல் முதியவர்களிடம் இளைஞர்கள் நடந்து கொள்வார்கள் என்றால், தேவனால் தரப்பட்ட இந்த இல்லரீதியான உறவானது பயன்பாடுள்ள சமூக வெளிச் செயல்பாட்டிற்கு விரிவாக்கப்படும்.[5] இளம் மனிதர்கள் மற்ற இளம் மனிதர்களுடன் சகோதரர்கள் என்ற வகையில் உறவுபடுவார்களென்றால், அவர்கள் ஒன்று கூடியிருத்தலின் வலிமைமிக்க சக்தியைக் கொண்டிருப்பார்கள்.

இந்த உறவுகள் எதிர்ப்பாலினருடன் செயல்படும் இளம் மனிதருக்கு (விசேஷமாக ஒரு இளம் சுவிசேஷ ஊழியருக்கு) அவரது வாழ்வில் மிகவும் நுட்பமானவைகளாய் உள்ளன.[6]

சபையின் பெண் உறுப்பினர்கள் தனிப்பட்ட வட்டாரத்திலிருந்து

தவிர்க்கப்படக் கூடாது ... பாவம் பற்றிய ஆலோசனை அளித்தலில் இருந்தும் அவர்கள் விலக்கி வைக்கப்படக் கூடாது. சில வேளைகளில் இப்பணியானது சங்கடத்துக்குரியதாய் இருப்பினும், இது ஒதுக்கி வைக்கப்படக் கூடாது. ஆனால் தீமோத்தேயு முதிய பெண்களுக்கு புத்தி கூறும் பொழுது, நல்ல மற்றும் அன்பு காட்டுகிற மகன் தவறு செய்யும் தனது தாயை நடத்துகிறது போல் அவர்களை நடத்த வேண்டும்! ஒருவர் தம் சொந்தத் தாயைத் திருத்துகிற பொழுது ஆழமான தாழ்மை, இருதயத்தை உண்மையாகவே ஆராய்தல், கிருபையின் அரியணையிலிருந்து போராடுதல், ஞானம் ஆகியவை நிச்சயமாகவே தேவைப்படுகின்றன! தவறு செய்கிற முதிய பெண்களுக்குப் புத்தி கூறுவதற்கு கடமையினால் நிர்ப்பந்திக்கப் பட்டதாக தீமோத்தேயு உணரும் பொழுது அவர் இவ்விதமான ஆவியுடனே செயல்பட வேண்டும்.[7]

இன்றைய நாட்களில் இளம் சுவிசேஷகர்களின் ஊழியமானது சந்தேகத் திற்கு அப்பாற்பட்டதாயிருப்பதற்கு தீமோத்தேயுவுக்குத் தரப்பட்ட புத்திமதிகள் யாவையும் கவனத்துடன் பின்பற்றப்பட வேண்டும். இளம் பெண்களிடம் ஊழியம் செய்கையில் ஒரு பிரசங்கியாருக்கு இது சிறப்பாக அவசியமாய் உள்ளது.

## தூய்மைக்கான அவரது அழைப்பு (வ. 2)

தீமோத்தேயுவின் முயற்சிகள் "எல்லாக் கற்புடனும்"[8] (5:2) இருக்க வேண்டும் என்று பவுல் வேண்டுகோள் விடுத்தார். இளம் சுவிசேஷகரின் ஊழியமானது (விசேஷமாக இன்றைய நாளில் "இளைஞர்களுக்கான ஊழியம்" எனப் பெயரிடப்பட்டுள்ள ஊழியமானது) அவரது நடத்தை, அவரது ஒழுக்க ரீதியான மற்றும் சமூக ரீதியான வாழ்வு ஆகியவை பற்றி தீமையாக ஒன்றும் பேசப்பட அனுமதிக்காத வகையில் அவர் இரண்டாம் மைல் தூரமும் செல்ல எப்பொழுதும் தயாராயிருக்கும் ஒரு மனநிலை கொண்டிருக்க அழைக்கிறது.[9]

ஒரு பலவீனத்தை வெற்றி கொள்ள உதவுவதற்கு (எந்த வயதுடைய) இன்னொருவருக்கும் ஊழியம் செய்தல் என்பது திருத்துபவரைத் தவறு செய்ய வழிநடத்தும் சூழ்நிலைகளில் வைத்து விடுவது சுலபமாக உள்ளது என்பது நினைவுகூர வேண்டிய கூடுதலான முன்னெச்சரிக்கையாக உள்ளது. கலாத்தியர் 6:1ல், "சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப் படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு" என்று கூறப்படுகிறது. ஆகையால் பவுல் தீமோத்தேயுவை ஒரு தூய்மையான, பாவமற்ற ஓட்டத்தை நாடும்படிக்கு வற்புறுத்தினார்.

## பாடம் 15: விதவைகளுக்கான பரிவு (5:3-16)

சபையில் உள்ள விதவைகள் உண்மையிலேயே "மதிக்க"[10] தகுதியானவர்களாக இருக்கின்றனர் (5:3). சபையின் ஊழியத்தில் விதவைகளைப் புறக்கணித்தல் என்பது மிகவும் சுலபம். அவர்கள் உதவி செய்ய முடியாது என்று நாம் யூகிக்கின்றோம், அல்லது "அவர்களை நாம் சிரமப்படுத்தக் கூடாது" என்று நாம் நினைக்கின்றோம். உண்மையில், அவர்கள் - தங்கள் தனிமையில் - ஊழியம் செய்ய மற்றும் ஊழியத்தினால் பயன் அடைய ஏக்கம் கொண்டவர்களாய் இருக்கலாம்.

## விதவைக்கு உதவி செய்ய வேண்டியது யார்? (வ. 4, 16)

விதவைகள் மீதான ஆர்வமும் அக்கறையும் முதலாவதாக - அவர்களின் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகள் என்ற - அவர்களின் நெருங்கிய உறவினர்களிடம் இருந்துதான் வர வேண்டும் (5:4). விதவை ஒருத்திக்கு அவளது பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளால் காண்பிக்கப்பட வேண்டிய மரியாதை மற்றும் கனம் என்பது நம் பரலோக தந்தை என்ற வகையில் தேவனுக்கு ஏற்ற பயபக்திக்கு இணையானதாக உள்ளது. விதவையான உறவினர்களுக்குப் பதில்செயல் செய்வதில் நமது ஆவியானது "பக்தியை நடைமுறைப்படுத்துவதாய்"[11] இருக்க வேண்டும்.

சரியான ஆவி என்பது செலவிடுதல் சிலவற்றில் ஈடுபாடு கொள்ளும். அன்பு காட்டப்பட்டவர்கள் தங்கள் பெற்றோர்களுக்கு "சில பதில் செயல்களைத் திரும்பச் செய்தல்"[12] என்பது தெய்வீகமாகச் சரியானதாகவே உள்ளது. இந்தத் திரும்பச் செய்தல் என்பது பெற்றோர்களைக் கவனிப்பதில் நமது செயல்பாடுகளையும் நமது எண்ணப்போக்குகளையும் உள்ளடக்குகிறது. நமது பெற்றோர்களுக்கு நாம் மதிப்பு அளிக்க வேண்டிய மூன்று வழிமுறைகளைப் பற்றி வில்லியம் பார்க்ளே அவர்கள் பின்வருமாறு கூறினார்:

> ... ஒரு மனிதருக்குரிய யாவையும் அவரைப் பெற்று வளர்த்தவர்களுக்குரியவை என்பதையும், அவர்களுக்குப் பணி செய்ய வேண்டிய யாவற்றையும் அவர் செய்ய வேண்டும் என்பதையும் ஆழ்ந்து சிந்தித்து, நாம் நமது முதலாவதும், மகா பெரியதும் மற்றும் பழையதுமான கடனைச் செலுத்த வேண்டும்; முதலாவது அவரது உடமையில்; இரண்டாவது, அவரது தனிப்பட்ட நேரிடையான விதத்தில்; மற்றும் மூன்றாவது, அவரது ஆத்துமாவில்; அவர்களின் பராமரிப்புக்கும், அவரது குழந்தைப் பருவத்தில் அவர்கள் பொழிந்த, நாட்களில் பழைமையான வேதனைகளுக்கும், மற்றும் இப்பொழுது அவற்றிற்கு திரும்பச் செலுத்த முடிந்தவற்றை அவர்கள் முதியவர்களாகவும் தங்களின் தேவையின் மிகுதியில் இருக்கின்ற வேளையிலும் அவர்களுக்குச் செலுத்த வேண்டிய கடனைச் செலுத்த வேண்டும்.[13]

செலவிடுதல் என்பது பற்றிய இந்த ஆலோசனையின் ஆதார மூலம் மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது: "இது தேவனுடைய பார்வையில் பிரியமுள்ளதாக இருக்கிறது." வேறு விதமாய்ச் செய்தல் என்பது தேவனுக்குப் பிரியமானதல்ல என்பது இங்கு மறைவாகச் சுட்டிக் காண்பிக்கப்படுகிறது. தேவன் - பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் முழுவதிலும் - விதவைகளுக்கு எப்பொழுதுமே விசேஷ வசதிகளைக் கட்டளையிட்டுள்ளார்.[14] விதவையை ஆதரவுடனும் அக்கறையுடனும் நடத்துதல் என்பது வேதாகம ரீதியான வழிமுறையாக உள்ளது.

> மிகவும் பரிசுத்தமான கடமைகளைக் கூட அரசிடம் தள்ளி விடுகின்ற காலம் ஒன்றில், பல விஷயங்களில் பொதுவான தர்ம சிந்தை என்பது தனிப்பட்ட ஈகைகளைச் செய்ய வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிற காலம் ஒன்றில் நாம் வாழ்கின்றோம் ... பெற்றோருக்கு அளிக்கப்படும் உதவி என்பது இரு விஷயங்களாக உள்ளது. முதலாவது, இது பெற்றுக் கொள்பவரை மதிப்பதாக உள்ளது. ஒரு பிள்ளை தனது இருதயத்திற்குள்ளாக இருக்கின்ற மதிப்பையும் மரியாதையையும் இந்த ஒரே ஒரு வழியில்தான் செயல்விளக்கப்படுத்த முடியும். இரண்டாவது, இது அன்பின் உரிமைகோருதல்களை ஒப்புக் கொள்ளுதலாக உள்ளது. இது அன்பானது அதன் அன்பின் கடன்களை மதித்தலாக உள்ளது. இது தேவைப்பட்ட காலத்தில் பெற்றுக் கொண்ட அன்பை தேவைப்பட்ட காலத்தில் அன்பு காட்டுவதன் மூலம் திருப்பிச் செலுத்துவதாக உள்ளது; அன்பானது அன்பினால் மட்டுமே திருப்பிச் செலுத்தப்படக் கூடியதாக உள்ளது.[15]

1 யோவான் 4:8ல் நாம், "அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்று வாசிக்கின்றோம் (வ. 19-21 வரையும் கூடக் காணவும்). உண்மையாகவே நாம், தற்கால சமுதாயத் தர அளவை களின்படியோ அல்லது சமூக மாறுபாடுகளின்படியோ அல்ல ஆனால் தேவனுடைய தர அளவையின்படியே செல்ல வேண்டியது அவசியமாக உள்ளது!

"உண்மையிலேயே விதவைகள்" யார் என்று பவுல் குறிப்பிட்டார். இப்படிப்பட்ட பெண்கள் தனிமையில், பிள்ளைகள் கூட இல்லாதவர் களாக இருக்கின்றனர். அவர்கள் தங்கள் நெருங்கிய குடும்பத்திலிருந்து தங்கள் தேவைகளை நிறைவேற்ற எவரொவரையும் கொண்டிருப்பதில்லை. இப்படிப்பட்ட விஷயங்களில் அவர்களுக்கு உதவுவதற்கு சபை அல்லது ஆர்வமுள்ள சகோதரர்கள் முன்வர வேண்டும்.

விதவைகளைக் கவனித்துக் கொள்வதற்குப் பவுல் இன்னொரு செயல் முறையையும் - ஒரு தனி நபரால், சிறப்பாக திறனுள்ள எந்தப் பெண்ணி னாலும் இது செய்யப்படலாம் என்பதை - அளித்தார் (5:16). சபையின் மீது "பாரத்தை வைக்கலாகாது" என்பதற்காக இது செய்யப்படலாம். சிலர் மிகவும் அதிகமாக கேட்டுக் கொண்டு அல்லது தேவையற்ற வகையில் வேண்டுகோள் செய்து கொண்டு உள்ளதால் சபையானது தேவையற்ற பிரச்சனைகளினால் சோர்வு படுத்தப்படுதல் இங்கு சித்தரிக்கப்படுகின்றது. நமது கிறிஸ்தவ ஆவியைப் பற்றிப் பவுல் 2 தெசலோனிக்கேயர் 3:7-10ல்

இதே பாடத்தைப் போதித்தார். நமது நாட்களில் வேலை எதுவுமின்றி "சபையின் மூலமாக வாழ" முயற்சி செய்யும் ஆத்துமாக்களின் சோதனை என்பது துன்பகரமானதாக உள்ளது.

## விதவை என்ன செய்ய வேண்டும்? (வ. 5)

பவுலின் வார்த்தைகள், முதியவர்கள் (விதவைகள்) தங்கள் சூழ்நிலை களுடன் இணங்கிச் செல்ல உதவுவதற்கு மாபெரும் பாடங்களை அளிக்கின்றன. ஒரு விதவை "தனிமையில் விடப்படுகையில்"[16] அவள் "தேவனிடத்தில்" நம்பிக்கையுள்ளவளாயிருந்து (அப். 20:32; கொலோ. 3:1-4; 1 பேது. 5:6, 7 ஆகியவற்றைக் காணவும்) வேண்டுதல்களினாலும் ஜெபங்களினாலும் தேவனுடைய நிறைவைச் சார்ந்திருக்க வேண்டும் (2:1ஐக் காணவும்). தேவை ஒன்றைப் பற்றி அவள் அறியும் பொழுது, அவள் அதைத் தேவனிடம் கொண்டு செல்ல வேண்டும். இதை அவள் "இரவும் பகலும்" செய்கின்றாள். அவளது சூழ்நிலைகள் அவளை மக்களுடன் குறைவான தொடர்புடையவளாய் விடுகின்ற வேளையில், அவள் தேவனு டன் அதிகமான தொடர்பைக் கொண்டிருக்க முடியும்.

## விதவை என்ன செய்யக் கூடாது? (வ. 6, 7)

ஒரு விதவையானவள் சுகபோக சந்தோஷங்களுக்குத்[17] திரும்பு வதினால் (5:6) "தன்னை ஜீவனிலிருந்து வெளித் தள்ளுகிற" மனத்தூண்டு தலின் வற்புறுத்துதல்களைத் தவிர்க்க வேண்டும். ஒரு விதவையின் வாழ்வு என்பது விருப்பத்தின் சுவாலையை எவ்வாறு உண்டாக்க முடியும் என்பதை உணர்ந்தறிவதற்காக, ஒருவர் தனிமையை அனுபவித்து, பிழைப்புக்கான அன்றாடப் போராட்டத்தை எதிர்கொண்டு, சிறிதளவே உண்ணலாம் அல்லது உண்ணாமல் இருந்து பார்க்கலாம். சந்தோஷம் தருகின்ற அல்லது (மற்றவர்கள் மகிழ்வுடன் அனுபவிப்பது போன்ற) சுகபோகமான தருணம் ஒன்றை மட்டும் பெற்றுக் கொள்வதற்கான இவ்வித விருப்பமானது ஒழுக்கம் மற்றும் ஆவிக்குரிய தடைகளை உடைக்கக் கூடும். ஒருவர், மயக்கி இழுத்தலைப் பற்றிக் கொள்வதற் காகவோ அல்லது தனிமைப் பசிகளைத் திருப்திபடுத்திக் கொள்வதற் காகவோ பல வழிகளை நாடலாம். அந்த வழிகள் யாவும் பவுலினால், "சுகபோகமாய் வாழ்கிறவள்" என்ற சொற்றொடரில் தொகுத்துரைக்கப் பட்டுள்ளது. இந்த வகையான சிந்தனைக்கு நெருங்கிய இணைவு ஒன்றை சங்கீதம் 73:2-28 முன் வைக்கிறது. வசனம் 17ல் நாம், விதவைகளுக்குப் பவுல் தெரிவித்ததைப் போன்ற ஒரு திருப்பு முனையைக் காண்கின்றோம். அவர் வாழ்வின் சூழ்நிலைகளின் முழுமையான புதிய அளவீட்டைப் பரிந்துரைப்பதுடன், வருத்தத்திற்கு மாறாக நிறைவை (திருப்தியை) மன ரம்யத்தை அளிக்கக் கூடிய ஒரு வாழ்வு முறையை ஞானமாய் வகைப்படுத்தினார்.

சுகபோகமாய் வாழ்வதற்குத் தன்னை ஒப்புக் கொடுத்த விதவை, வருத்தத்திலிருந்து விடுதலையையோ அல்லது சோதனைகளுக்கு நீங்கும்

வழிமுறைகளையோ காண மாட்டாள் என்று பவுல் நமக்கு உறுதிப் படுத்தினார். மாறாக, சுகபோகம் மற்றும் பாவம் நிறைந்த இன்பங்களுக்கு அடி பணிந்து செல்லுதல், அவள் உயிரோடிருக்கையிலேயே அவளை மரணத்திற்கு வழிநடத்தும்.

பல்வேறு வயதுக் குழுவினருக்கும் விதவைகளுக்குமான பவுலின் ஞானமிக்க வார்த்தைகள் விருப்பத் தேர்வாக இருப்பதில்லை; அவைகள் "கட்டளைகளாக உள்ளன" (ASV). தீமோத்தேயு இந்த உபதேசங்களைச் சகோதரர்களுக்கு "கட்டளையிடும்படியாக" பவுல் கூறினார். கீழ்ப் படிதலின் நற்கனி தெளிவானதாக உள்ளது; கீழ்ப்படிதலுடன் உள்ள யாவரும் "குற்றம் சாட்டப்படாதவராயிருப்பார்" (Gk.: *anepileptos;* 5:7).

## புறக்கணித்தல் பற்றிய ஒரு எச்சரிக்கை (வ. 8)

அடுத்தபடியாகப் பவுல், புறக்கணித்தலின் ஆபத்து பற்றி எச்சரித்தார்: "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுத்தலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" *(5:8).*

இல்லத்து அளவில் புறக்கணித்தல் என்பது அபாயமானதாக உள்ளது, ஏனென்றால் அது சமூகம் மற்றும் நிறுவன ரீதியான பிற பகுதிகளுக்கும் புறக்கணித்தலுக்கான கதவைத் திறக்கின்றது. ஒருவர் தம் வீட்டாரின் (ஒழுக்க ரீதியானதோ, ஆவிக்குரியதோ அல்லது பொருள் தேவைகளோ எதுவாயிருப்பினும் அந்தத்) தேவைகளைக் கவனிக்கத் தவறுதல் என்பது அவர் தம் விசுவாசத்தை மறுத்தல் என்பதாயிருக்கக் கூடும். "விசுவாசத்தை மறுத்தல்" என்ற சொற்றொடர் இவ்விடத்திலும் மற்றும் வெளி. 2:13லும் மட்டுமே காணப்படுகிறது என்று மார்வின் R. வின்சென்ட் அவர்கள் கூறினார். அவர் பின்வரும் சிந்தனையையும் கூடுதலாகக் குறிப்பிட்டார்: விசுவாசம் என்பது பணிகளையும் கனிகளையும் வற்புறுத்துகிறது. கிறிஸ்தவ விசுவாசம் மறைமுகமாய்க் குறிப்பிடும் இயல்பான கடமைகளை மறுப்பதினால் ஒருவர் தாம் விசுவாசம் கொண்டிருப்பதையே நடைமுறை யில் மறுக்கின்றார். "விசுவாசம் என்பது இயல்பான கடமைகளை நீக்கிப் போடுவதில்லை, ஆனால் அவற்றை பூரணப் படுத்தி பலப்படுத்துகிறது" (Bengel).[18] வின்சென்ட் அவர்கள் யாக்கோபு 2:14-17ஐக் குறிப்பிட்டார்: "என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? … அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால், தன்னில் தானே செத்ததாயிருக்கும்." (மாற். 7:10-13ஐயும் கவனிக்கவும்.) வேதாகம விசுவாசம் என்பது கீழ்ப்படிகின்ற விசுவாசமாக உள்ளது.

சீர் குலைந்த இப்படிப்பட்ட நடக்கையின் அளவைப் பவுல் விவரித் தார்: ஒருவர் தன் குடும்பத்தைப் புறக்கணித்தால், அவர் அவிசுவாசியிலும் கெட்டவராயிருப்பார், ஏனெனில் ஒரு அவிசுவாசி இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவதாக நடிக்காமல் தனது குடும்பத் தேவைகளின் மீது அக்கறை

காண்பிக்கிறார். எல்லாருக்காகவும் - தம்முடைய விரோதிகளுக்காகக் கூட - தம்மையே கொடுத்த ஒருவரின் அடிச்சுவடுகளைக் கிறிஸ்தவர் பின்பற்ற வேண்டும் (2 கொரி. 5:14, 15; 1 பேது. 2:21-24).

## சபையினால் விதவைகள் கவனிக்கப்படுதல் (வ. 9, 10)

விதவையொருத்தியை எப்பொழுது "(விதவைகளின்) பட்டியலில் (5:9) இடுவது"[19] என்பது பற்றி சபை அறிந்து கொள்ளும்படி பவுல் "உண்மையிலேயே விதவை"(5:3, 4, 16)யானவளை அடையாளப்படுத்தினார். தகுதியடையும் பொழுது நாட்டினால் ஆதரிக்கப்படும் படைவீரர்களுக்கு உரிய பொதுவான சொற்றொடர் ஒன்றைப் பவுல் பயன்படுத்தினார். வின்சென்ட் அவர்கள் கவனித்துள்ளபடி பவுல், சபையின் உதவியைப் பெறுகின்ற விதவைகளின் கூட்டத்திற்கு இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தியதாகக் காணப்படுகின்றது.[20] விதவைகளைக் கவனித்தல் என்பது சபையின் முதன்மையான தேவைகளில் ஒன்றாக இருந்தது (அப். 6:1-3).

பெயர் சேர்க்கப்படக் கூடிய விதவை ஒரு பெண்ணாக மட்டுமே இருக்கிறார்! தகுதி வாய்ந்த விதவை என்பவர் ஒரு காலத்தில் மதிக்கத் தக்க திருமண வாழ்வைக் கொண்டிருந்தார்; ஆனால் அவர் இப்பொழுது தனிமையாய் இருக்கின்றார், மற்றும் அவருடைய வயதானது அவர் தம்மைத் தாமே கவனித்துக் கொள்ளும் திறனில் குறைவாயிருக்கிறார் (5:9). எல்லாவற்றிற்கும் மேலாக, சபையினால் ஆதரிக்கப்படும் விதவையானவர் தம்மை மகிமையினால் முடி சூட்டுகிற ஊழியத்தின் ஆதாரப் பதிவு கொண்டவராய் இருக்க வேண்டும் (5:10).[21]

அப்பெண்மணி பிள்ளைகளை வளர்த்து இல்லத்தில் பணி புரிந்திருக்கிறாள். அவர் "அந்நியரை உபசரித்தவராக" (எபி. 13:2; 1 பேது. 4:9), சமுதாயத்தில் பணியாற்றியிருகிறாள். அவர் "பரிசுத்தவான்களின் கால்களைக் கழுவி" யிருக்கிறாள் (இது யோவா. 13:3-15ன்படியாக சபையின் ஆசரிப்புகளில் ஒன்றல்ல ஆனால் ஒரு நல்ல பணியாக மட்டுமே உள்ளது), இதன் மூலம் அவர் தாழ்மையுடன் ஊழியம் செய்திருக்கிறாள். அவள் உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவியிருக்கிறாள் (மத். 25:36), இரக்க சிந்தையுடன் ஊழியம் செய்திருக்கிறாள். சொல்லப் போனால், இவர் நல்ல ஊழியங்களுக்காகப் புகழ் பெற்றவராய் இருக்கிறாள். "அவள் ஒவ்வொரு நல்ல ஊழியத்திற்கும் தன்னை அர்ப்பணித்திருக்[22]கிறாள்." இப்படிப்பட்ட ஒரு சகோதரி தாம் எங்கு பணியாற்றினாலும் சபைக்கு நன்மைக்கான செல்வாக்கை அழகுடன் தருவிப்பார்.

## தவறு செய்கின்ற மற்றும் தவறுகின்ற ஒரு விதவை (வ. 11-13)

மனித பலவீனங்களுக்குள் ஊடுருவும் பரிசுத்த ஆவியானவரின்

உட்கண்ணோட்டமானது மனத் தூண்டுதலின் பாவத்தைத் தவிர்க்கும்படி இளம் விதவைகளுக்குப் பவுல் விடுக்கும் வேண்டுகோளில் அளவை வரைபடமாகக் காணப்படுகின்றது. விதவைகள் கிறிஸ்துவையும் பொதுக் கருத்தறிவையும் கைவிட்டு விடுவதை அவர் விரும்பாதிருந்தார்.

ஒரு இளம் சகோதரி தனது துணைவர் தனது இல்லத்திலிருந்து திடீரென்று எடுக்கப்படும் பொழுது எவ்வாறு மறுசெயல் செய்யக் கூடும் என்பதற்கான ஆய்வு ஒன்று இவ்விடத்தில் உள்ளது. அவள் தனது நெருங்கிய துணையை இழந்து ஒரு "உதவியாள்" தனக்கு மிகவும் அவசியப்படுகின்ற சோதிக்கும் வேளையை எதிர்கொள்ளுகிறாள்.

1. அவளது இழப்பானது கிறிஸ்துவிடத்தில்/கிறிஸ்துவைப் பற்றிய சந்தேகத்தையும் சீற்றத்தையும் கட்டி எழுப்பக் கூடும்.

2. அவள் ஆணின் நெருக்கத்திற்கு வேட்கை கொண்டிருக்கக் கூடும்.

3. அவள் கொண்டுள்ள சலிப்பூட்டும் சிந்தனையின் (அவளை தேவனிடமிருந்து தன்னை ஒளித்துக் கொள்ள வழிநடத்தும் சிந்தனையின் - ஆதி. 3:8) மூலம் அவள் பயத்தையோ அல்லது குற்றத்தையோ அனுபவிக்கக் கூடும்.

4. மனரீதியான மற்றும் உடல் ரீதியான சோர்வின் மத்தியில் அவள் சோம்பற்தனமுள்ளவள் ஆகக்கூடும்.

5. சகோதரர்கள் "நாம் இந்த சகோதரி தனிமையில் இருக்க நேரம் தர வேண்டும்" என்று (அவளது துக்கத்தின் நிமித்தமாக) நினைத்து அவளுடைய தொடர்பை விட்டு விடுகையில் அவள் தனிமைப்படுத்தப்பட்டு விட்டதாக உணரக்கூடும். சபையானது கர்த்தருக்கான அவளது ஊழியத்தை நீக்கிப் போடக்கூடும், அவளைப் பாரப்படுத்த விரும்பாமையால் அவளுக்குப் பணிகளைத் தருவதைப் புறக்கணிக்கக்கூடும்.

பவுல் இந்த உண்மையான அபாயங்களைக் குறித்து ஏவுதலினால் நம்மை முன்னெச்சரிக்கை செய்தார். கிறிஸ்துவுக்குள்ளான நல்ல சகோதரி கள் மூழ்கடிக்கும் துக்கத்தை எதிர்கொள்ளும் போது பாவத்தினால் விழுங்கப்படுவதை எவ்வாறு தவிர்க்க வேண்டும் என்று நாம் (அவர்களுக்குப்) போதிப்பது அவசியம். ஒரு இளம் விதவை செய்யக் கூடிய நுட்பமான ஆறு தவறுகளைப் பற்றிப் பவுல் பொதுவான போக்கு ஒன்றை முன்னிறுத்தினார்:

1. அவள் கிறிஸ்துவுக்கு கனவீனமான (5:11) "உணர்வு ரீதியான விருப்பங்களை"[23] கொண்டிருந்து, கர்த்தரைக் கை விட்டுவிடக்கூடும். கிறிஸ்தவப் பெண் பிசாசுக்குரிய இச்சைகளைத் தன்னில் கொண்டிருக்கக் கூடாது!

2. இந்த விதவைகள் முதலில் தாங்கள் கொண்டிருந்த விசுவாசத்தை[24] "கைவிடுகின்றனர்"[25] (5:12). இளம் விதவை தேவபக்தியுள்ள தனது நிலைப் பாட்டை "புறக்கணிக்கக்கூடும்." அவளது துயரத்தினால், அவள் தனது துணைவருடன் கொண்டிருந்த உடன்படிக்கையானது கொடூரமான வகையில் முறிக்கப்பட்டதால், கிறிஸ்துவுடன் தான் கொண்டுள்ள உடன் படிக்கையை முறித்துக் கொள்வது நீதியானதே என்று அவள் வாதிடக் கூடும். தேவனுடைய வல்லமை மற்றும் நற்தன்மையின் மீது அவள்

கொண்டுள்ள விசுவாசமானது கடினமான சோதனைக்கு உட்பட்டுள்ளது! இங்கு தெய்வீகத்தை மறுதலித்தல் காணப்படுகின்றது.

3. அவள் ''சோம்பேறி''யாகிறாள் (5:13). அவள் தனக்கு மறு வாழ்வளிக்க உதவக்கூடிய வேண்டுகோள்களை வற்புறுத்திக் கேட்கத் தொடங்குகிறாள்.

4. அவள் வீடு வீடாக "திரியத்"[26] தொடங்குகிறாள். அவள் தனிமையாய் இருக்க நோக்கமின்றி சுற்றித் திரியத் தொடங்கக்கூடும்; ஆனால் இது விரைவாகவோ அல்லது தாமதமாகவோ அவளைத் தவறான இடத்திற்கு வழிநடத்தி விடும்! அவள் இலக்கற்ற செயல்கள் அல்லது நோக்கமற்ற அலைதல்களில் ஈடுபாடு கொள்கின்றவள் ஆகிறாள்.

5. அவள் "புறங்கூறுதலின்"[27] முகாமிற்குள் நுழைகிறாள். போட்டித் தன்மையில் உள்ள விமர்சனத்தின் நிலைப்பாட்டினால் வீண் பேச்சானது தூண்டப்படக் கூடும்: "நான் செய்து கொண்டிருப்பதை நீங்கள் விரும்புவ தில்லை, எனவே நீங்கள் செய்து கொண்டிருப்பதைப் பற்றிய சில தவறுகளை நான் கண்டு பிடிப்பேன்;" இது அவளது வறுத்தத்தை மறுப்ப தற்கான இலேசான இருதயம் கொள்ளுதலின் முகமூடியாகவும் இருக்கக் கூடும். அவள் தனது ஆழ்ந்த வருத்தத்தின் உண்மை நிலையிலிருந்து தப்பு வதற்காக வீண்/அற்பமான பேச்சுகளில் ஈடுபடுகிறாள். அவளது அபாய மான அறிவித்தல்கள் விரைவிலோ அல்லது தாமதமாகவோ அவளை மற்றும்/அல்லது பிறரைப் புண்படுத்துகின்றன.

6. அவள் "வீண் அலுவல் செய்பவர்களுடன்"[28] மதிப்பற்ற சீண்டுதல் களில் இணைந்து கொள்கிறாள்! அவளும் அவளது புறங் கூறும் தோழிகளும் தகாத செய்திகளை "ஆராய்ந்து பார்க்க" முயற்சி செய்கின்றார்கள்.

கிறிஸ்துவுக்குள்ளான ஒரு சகோதரி முழுமையற்ற, சீரழிக்கிற இந்த வகையில் நடந்து கொள்ளுகையில் அவளை ஆதரித்தல் என்பது எவ்வளவு துன்பகரமானதாக இருக்கும்! ஏற்கனவே துக்கத்தின் சுமை கொண்டுள்ள ஒரு சகோதரி மயக்கியிழுக்கும் இவ்விதமான போக்குகளை ஒருக்காலும் பற்றிக் கொள்ளாதபடிக்கு பவுலின் முன்னெச்சரிக்கையான வார்த்தைகள் எந்தவொரு இளம் விதவையினாலும் மற்றும் சகோதரர்களினாலும் நினைவு கூரப்பட வேண்டும்.

## ஒரு இளம் விதவைக்கு வேறொருவழி (வ. 14, 15)

தேவன் தம்முடைய பிள்ளைகளை எந்த சூழ்நிலையிலும் ஒரு நல்ல திசையை நோக்கி இட்டுச் செல்ல வல்லவராய், இருக்கிறார். இளம் விதவையைப் பிசாசிடம் ஒப்புக்கொடுத்து விடுவதற்கு மாறாகப் பவுல் நடைமுறைக்கேற்ற சில மாற்று நடக்கைகளை அவளுக்குத் தந்தார்.

இளம் விதவையானவள் மீண்டும் திருமணம் செய்து கொள்வதினால் தோழமைக்கான இயல்பான மனவிருப்பத்தைப் பின் தொடரலாம் (5:14). வசனம் 11ல் உள்ள உதாரணமானது கிறிஸ்துவுக்கு கனவீனம் தரக்கூடிய, திருமணம் பற்றிய அபாயமான மற்றும் ஞானமற்ற ஓட்டத்தைப் பின்

*தொடருகிறது. இவ்விடத்தில் பவுல், இளம் விதவைக்கான தம் முன்னெச்சரிக்கையானது திருமணம் செய்து கொள்வதற்கான அவளது உரிமையைப் புறக்கணித்தலாயிராமல் (ரோமர் 7:2, 3) வசனம் 11ல் தரப்பட்டுள்ளபடி திருமணத்திற்கான அவளது நோக்கத்தை மாற்றுவதற் கானதாகவே இருந்தது என்று வலியுறுத்தினார்.*

*அவள் "பிள்ளைகளைப் பெற" வேண்டும், ஏனெனில் அன்பு செய்யப் பட்ட ஒருவருடைய இழப்பானது அவளுக்குள்ளாக, உலகத்திற்கு ஒரு உயிரைக் கொண்டு வருதலில் அல்லது மீண்டும் குடும்ப சூழ்நிலையில் அன்பைப் பகிர்ந்து கொள்ளுதலில் பயத்தை உருவாக்கக் கூடாது.*

*"வீட்டை நடத்துதல்" என்ற பவுலின் புத்திமதியை அவள் பின்பற்றி னால் கிறிஸ்துவுக்கான அவளுடைய ஊழியமானது நிலைத்த தன்மை யுடையதாய் இருக்க முடியும். அவள் "வீட்டாரை ஆள" வேண்டும் என்று* KJV *கூறுகிறது. சகல அதிகாரத்தையும் கொண்டுள்ளதாகக் கிறிஸ்து உரிமைகோரியதற்கு (மத். 28:18), கிறிஸ்து தேவனுக்கு மேலானவராய் இருப்பதில்லை (1 கொரி. 15:23-28) என்ற பவுலின் கூற்று எவ்வளவு முரண்படுவதாய்த் தோன்றுகிறதோ அவ்வளவுக்கதிகமாக இக்கூற்றானது கணவரே மனைவிக்குத் தலையாக இருக்கிறார் (எபே. 5:23, 24) என்ற பவுலின் கூற்றுடன் முரண்படுவதில்லை. 1 கொரிந்தியர் 11:3ல் பவுல் உரைத்துள்ளபடி, மனைவியின் ஆளுகையானது கணவருக்கு மேலானதாக இருப்பதில்லை, ஆனால் ஒழுங்மைவு பெற்ற மற்றும் நன்கு மேலாண்மை செய்யப்படுகிற இல்லத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அவருடன் இணைந்து பணி செய்தலே அவளது பொறுப்பாக உள்ளது. பிள்ளைகளைப் பயிற்று விப்பதும் ஒரு இல்லத்தை நடத்திச் செல்வதும் தகப்பனுடைய பணியாக மட்டுமே இருப்பது இல்லை.*

*இல்லத்தில் அவளுடைய நடத்துவத்துவமானது தகுதியான ஒரு இலக்கைக் கொண்டுள்ளது: அதாவது, விரோதியானவன் - பிசாசும் அவனு டைய உதவியாட்களும் ("விரோதியானவர்";* KJV*) - கட்டுப்படுத்துதலைப் பெற மாட்டான். எந்த விரோதியும் விதவையை "குற்றம் சாட்ட"*[29] *வாய்ப்புக் கொண்டிராதபடிக்கு அவள் தனது பங்கை(பணியை)ச் செய்ய வேண்டியுள்ளது. (தீத்து 2:8; 1 பேது. 2:11, 12; 3:15-17 ஆகியவற்றைக் காணவும்.)*

*அதிகாரம் 5ல் கொடுக்கப்பட்டுள்ள பவுலின் கொள்கைகள் மதிக்கப் பட்டால், தங்களின் அன்பிற்குரியவர்கள் சபையின் மூலமாய்ப் பராமரிக்கப் படும்படியாக எந்தவொரு பிள்ளையும் அல்லது பேரப்பிள்ளையும் கைவிட மாட்டார்கள். அந்தக் கொள்கையானது சம அளவில் துன்பகரமான தாக(வும்) இருக்கும். பவுலின் கொள்கைகளை எல்லாரும் பின்பற்றினால், உண்மையிலேயே விதவைகளுக்கு நிவாரணம் அளிப்பதிலிருந்து சபை விடுதலையாகியிருக்கும், மற்றும் அது தேவையில் உள்ளவர்களுக்குத் தனது கடமையை நிறைவேற்றுவதிலிருந்து ஓய்ந்திருக்கும் அபாயம் ஒருக்காலும் ஏற்படாது (2 கொரி. 8:13-15; கலா. 6:2-5ஐக் காணவும்).*

## பாடம் 16: மூப்பர்களுக்கான விசேஷ பரிவு (5:17-25)

இங்கு பவுல் சபையில் தனிச் சிறந்த ஊழியத்தைச் செய்கிற சகோதரர் களுக்கான ஏராளமான ஆலோசனைகளை அளித்தார். இந்தக் காலத்தில் மூப்பர்கள் அல்லது கண்காணிகள் என்பவர்கள் மிகவும் அடிக்கடி புறக் கணிக்கப்படுகின்றனர் மற்றும் மிக அதிகமான மூப்பர்கள் இவ்விடத்தில் பவுல் ஆலோசனை தெரிவித்தபடியாக ஊழியம் செய்வதைப் புறக்கணித்து விடுகின்றனர். பவுலின் ஏவுதல் பெற்ற அறிவுறுத்தல்களின் அடிப்படையில் நாம் ஆவியானவரின் தெய்வீக ஆணைகளுக்கு இசைந்த வகையில் இவ்விஷயங்களைத் திருத்திக் கொள்ளுதல் அவசியம்.

### செய்யப்பட வேண்டிய ஆவிக்குரிய ஊழியம் (வ. 17)

''நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திரு வசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ண வேண்டும்'' (5:17) என்று பவுல் தொடங்கினார். நன்றாய் "விசாரணை"[30] செய்கிற மூப்பர் செயல்வலிவுள்ள மூப்பராக இருக்கிறார். சபையில் சர்வாதிகாரப் போக்கிற்கோ, தற்புகழ்ச் சிக்கு இடம் கொடுக்கும் மூப்பருக்கோ, அல்லது தான் கொண்டுள்ள வாக்களிக்கும் அதிகாரத்திற்கு விசாரணை செய்ய தனக்குப் பிரியமான வகைகளில் சிடுசிடுப்பதை "விசாரணை" யுடன் தொடர்பு படுத்தும் வெளிப் பகட்டான மேய்ப்பருக்கோ இடம் இல்லை. எந்த ஒரு நல்ல ஊழியத்தை யும் அடியோடு வீழ்த்தப்படும்படி காண்பதற்காக அதை நிறுத்துவதற் கென்று அவருக்கு "பிறர் முடிவை மறுக்கும் அதிகாரம்" தரப்படவில்லை. விசாரணை செய்வதற்கான மூப்பரின் அதிகாரம் அவர் பராமரிக்கின்றவர் கள் மீது ஊக்கமான கவனம் செலுத்துவதையும் அவர்களுக்கு உதவுவதை யும் கேட்பதாய் உள்ளது. நம்முடைய ஆத்துமாக்களின் பிரதான மேய்ப்பரைப் போல (1 பேது. 2:25; 5:4; மத். 20:26-28) மூப்பர் தமது பொறுப்பில் ஒப்புவிக்கப்பட்டவர்கள் மீது அக்கறையுடன் ஊழியம் செய்வதால் விசாரணை செய்கிறார். மூப்பர் விசாரணை செய்கின்ற பல வழிமுறைகளைப் பவுல் அட்டவணைப் படுத்தினார்:

(1) அவர் "நன்றாய்" விசாரணை செய்கின்றார். ஒருவரின் ஊழியம் செய்யும் ஆவியை அடையாளப்படுத்த இது எப்படிப்பட்ட வளம் மிக்க சொற்றொடராக உள்ளது! "நன்றாய்" என்பது மேன்மையையும், நீதியையும் மற்றும் நேர்மையையும் மறைமுகமாய்க் குறிப்பிடுகின்றது. இது மாண்பு வாய்ந்த, குற்றம் இல்லாத தன்மையை ஆலோசனையாய்க் குறிப்பிடுகிறது. இந்தப் பண்புகளில் எது இல்லாமல் ஒரு மூப்பர் ஊழியம் செய்ய இயலும்?

(2) அவர் ''பிரயாசப்படுகிறார்''[31] இவ்விதமாக ஊழியம் செய்கிற

மூப்பரைத் தங்கள் மத்தியில் கொண்டுள்ள சபையானது எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டதாயிருக்கும்!

(3) அவர் "பிரசங்கிப்பதில்"[32] பிரசாயப்படுகிறார். அவர் மூப்பர் என்ற வகையில் தமது ஊழியத்தி(னா)ல் களைப்புற்றவராகவும் பலன் தீர்ந்து போனவராகவும் ஆகின்றார். இங்கு நேர்ப் பொருளான மொழிபெயர்ப்பு "(திரு)வசனத்தில்" என்று அர்த்தப்படுவதால், இது ஒருவரின் பேச்சை மறைமுகமாய் உணர்த்துவதாகக் காணப்படுகிறது. இருப்பினும் "வெகுவாய்ப் புத்திமதி சொல்லி" என்று அப். 20:2ல் உள்ளது போன்றதொரு சொற்றொடரானது "(திரு)வசனத்தைக் கொண்டு அவர்களுக்கு அதிகமாய்ப் புத்தி கூறி ..." என்று அர்த்தம் நிறைந்த வகையில் மொழிபெயர்க்கப்பட முடியும். பிந்திய கருத்தானது சரியாய் இருக்கிறதென்றால், இந்த மூப்பர் (திரு)வசனத்தில் தமது பிரயாசத்தினால் (படித்தலினால்) பலன் தீர்ந்த வராகின்றார். முந்திய கருத்தானது சரியாய் இருக்கிறதென்றால் (வார்த்தை அல்லது பேச்சில் என்றுள்ளபடியால்), அவர் சகோதரர்களுக்கு முன்பாக கட்டுப்படுத்தும் மற்றும் ஆலோசனை அளிக்கும்/ஆற்றுப் படுத்தும் பேச்சி(னா)ல் பலம் தீர்ந்தவராகிறார். இவ்விரு கருத்துக்களுமே அவர் வசனத்தைக் கவனமாய்ப் படிக்கின்ற மாணவராய் இருக்க வேண்டும் என்பதை வேண்டிக் கேட்கின்றன (1 பேது. 4:11).

(4) அவர் "உபதேசத்தில்" பிரயாசப்படுகிறார், தேவையில் உள்ள ஆத்துமாக்களுக்கு சத்தியத்தை பகிர்ந்தளிப்பதிலும் மற்றும் அவர்களுக்கு அறைகூவல் விடுப்பதிலும் அவர் பலன் தீர்ந்தவராகின்றார். அவ்வகையான ஊழியம் செய்தலை "நல்ல வாழ்க்கையொன்றை வாழ்வதினால்" மட்டும் சாதித்து விட முடியாது. வேத வசனத்தில் மிகவும் ஊறிய மற்றும் பிறருடன் வசனத்தைத் தனிப்பட்ட முறையிலும் வெளியரங்கமாகவும் பகிர்ந்து கொள்ளும் செயல் விளைவுள்ள தன்மையினால் களைப்படைகின்ற மூப்பர்கள் நமக்குத் தேவை.

"திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்கள்" என்பது எபேசு சபையின் மூப்பர்களின் மத்தியில் பவுலின் நடக்கைக்கு இணையாகிறது. பிற்பாடு அவர், "பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்காமல், வெளியரங்கமாக வீடுகள் தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம் பண்ணி" என்று கூறி, மூப்பர்கள் என்ற வகையில் அவர்கள் எவ்வாறு ஊழியம் செய்ய வேண்டும் என்பதற்கு முன்மாதிரியை அவர்களுக்குக் கொடுத்தார் (அப். 20:20, 35).

## சகோதரர்கள் கொண்டிருக்க வேண்டிய ஆதரிக்கும் ஆவி (வ. 17, 22)

பவுல் விவரித்தபடியாக ஊழியம் செய்கிற மூப்பர்கள் உறுதியாகவே, "இரட்டிப்பான கனத்திற்குப்[33] பாத்திரராய்"[34] இருக்கின்றனர் (5:17). மூப்பர்கள் "இரட்டிப்பான கனம்" பெற வேண்டும் என்பது எதனை அர்த்தப்படுத்துகிறது என்பது பற்றிப் பலவகையான கண்ணோட்டங்கள்

தரப்பட்டுள்ளன. இச்சொற்றொடர் பின்வருபவற்றில் எதையாவது அர்த்தப்படுத்தக் கூடும்:[35]

1. இரட்டை ஊதியம்
2. மதிப்புடன் சம்பளம்
3. அறுபது வயதான விதவைகளுக்குரிய ஊதியம் போல் இரு மடங்கு
4. உதவிக்காரர்களின் ஊதியத்தைப் போல் இரு மடங்கு
5. முதியவர் என்ற வகையிலும் மூப்பர் என்ற வகையிலும் மதிப்பு
6. சகோதரர் என்ற வகையிலும் மூப்பர் என்ற வகையிலும் மதிப்பு
7. பதவி மற்றும் ஊழியம் ஆகியவற்றின் காரணமாக - ஊதியம் உட்பட - விசேஷித்த மரியாதை

மேற்கண்ட அட்டவணையில் 2 மற்றும் 7 எண் கொண்டவை இந்த சந்தர்ப்பப் பொருளில் ஆழ்ந்த சிந்திக்கப்பட வேண்டும். இந்த சகோதரர்கள் "தகுதி வாய்ந்தவர்களாக" உள்ளனர்.

## ஒரு மூப்பர் "பிரயாசப்படுகிற" பொழுது (வ. 17, 18)

கிறிஸ்துவின் கீழாக மற்றும் அவர் மூலமாக சபைக்கான தெய்வீக விருப்பத்தை மீளக்கட்டுவதற்கான நமது முயற்சிகளில் நாம் இரு தேவைகளைக் கொண்டுள்ளோம்: (1) மனிதர்கள் "பிரசங்கித்தலிலும் போதித்தலிலும் பிரயாசப்படக்" கூடியவர்களாய் இருக்கும்படி நாம் தகுந்த, சிறப்புமிக்க பயிற்சியை அளிக்க வேண்டும். (2) இந்த மாபெரும் ஊழியத் திற்கு ஒருவர் (வழக்கமாக, ஓய்வு பெற்று ஒரு மந்தையுடன் ஊழியம் செய்யும்படி அங்கு தங்கி அமையும், பயிற்சி பெற்ற சுவிசேஷகர் ஒருவர்) தயாராகும் பொழுது, நாம் அவர்களுக்கு ஊழியம் செய்ய நேரமும் (பயிற்சிக்) கருவிகளும் பெற்றுக் கொள்ள உதவி அளிக்க வேண்டும்.

சுவிசேஷ ஊழியர்களுக்கு உதவியளிப்பதற்கான அறிவுறுத்தல்களைப் புதிய ஏற்பாட்டில் நாம் எவ்வளவு அதிகமாகக் காண்கிறோமோ அவ்வளவு அதிகமாக மூப்பர்களுக்கு ஆதரவு அளிப்பதைப் பற்றியும் காண்கிறோம் (1 கொரி. 9:13, 14; கலா. 6:6; 1 தீமோ. 3:3; தீத்து 1:7; 1 பேது. 5:2).

"பிரசங்கிப்பதிலும் போதிப்பதிலும் பிரயாசப்படுகிற" மூப்பர்களுக்கு உதவியளிக்கப்பட வேண்டும் என்பதற்கு 5:17, 18ன் சந்தர்ப்பப் பொருள் நிரூபணம் அளிக்கிறது:

1. இலக்கணக் கட்டமைப்பானது இதை வேண்டுகோள் விடுக்கிறது. "பாத்திரராக எண்ண வேண்டும்" என்பது சொற்றொடராக உள்ளது. அதாவது, மூப்பர்கள் "இரட்டிப்பான கனத்திற்குப்" பாத்திரராய் இருக்கும்படி நாம் ஜெபிக்கவும் ஏற்பாடு செய்யவும் வேண்டும்.

2. பவுல், "போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்று ... வேத வாக்கியம் சொல்லுகிறதே" (5:18; உபா. 25:4ஐக் காணவும்) என்பதை மேற்கோள் காண்பித்தார். பிரசங்கியார் வசனத்தைப் பிரசங்கிக்கும் பொழுது உதவியளித்தலின் சரியான தன்மையை நிரூபிக்க இந்த விளக்கத்தை அவர் 1 கொரி. 9:9-14ல் பயன்படுத்தினார்.

*3. பவுல், "வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான்" என்றும் கூடக் கூறினார் (5:18). இது ஊதியத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. வேலையாளுக்குக் கூலி தருதல் என்பது வேத வசன ரீதியானது என்று பவுல் மறைமுகமாய்க் குறிப்பிட்டார். இப்பொழுது இதை நாம் அறிகிறோம், ஏனெனில் பவுல் இதை எழுதினார்! இருப்பினும், இதே விளக்கத்தை லூக்கா 10:7ல் இயேசு பயன்படுத்தினார். பழைய ஏற்பாட்டுக் கொள்கை இதைப் போதித்தது, பவுல் இதைப் போதித்தார், மற்றும் இயேசு இதைப் போதித்தார்.*

## ஒரு மூப்பர் பாவம் செய்கின்ற பொழுது (வ. 19, 20)

*சகோதரர்கள் மத்தியில் உள்ள பாவத்தைக் குறித்து நாம் கொண்டிருக்கத் தேவையான ஆவியைப் பற்றி உள்ளடக்கம் கொண்டுள்ள காரணிகளைக் கவனியுங்கள்.*

*முதலாவது, குற்றம் சாட்டவோ அல்லது குற்றம் சாட்டுதல்களைக் கேட்கவோ நாம் மனக் கவலை கொண்டவர்களாய் இருக்கக் கூடாது (5:19). "சாருள்ள புறங்கூறுதலை" கேட்பவர் அல்லது இன்னொரு நபரைப் பற்றிய நவீனமான விமர்சன விளக்கத்தைக் கேட்கப் பிரியப்படும் நபரின் உள்ளாக உளவியல் ரீதியாக சில விஷயங்கள் பிறழ்வுபட்டுள்ளன. நாம் வேதாகம ரீதியான மற்றும் பொது அறிவு ரீதியான செயல்முறைகளைப் பின்பற்ற வேண்டும். ஏற்படுத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்கு நாம் எப்பொழுதுமே சாட்சியங்களை வற்புறுத்திக் கேட்க வேண்டும். இது கதை விரிவாக்கப் படுதலைத் தவிர்க்கும். உணர்வெழுச்சி மிக்க தருணம் ஒன்றில் கூட்டப் பட்ட ஒரு சொற்றொடர் அல்லது ஒரு வார்த்தையானது கதையையே மாற்றக் கூடியதாகி, செய்யப்பட்டதன் சரியான அல்லது தவறான தன்மை பற்றி எடுக்கப்படும் முடிவை மாற்றி விடுவதாக முடியும். சாட்சியங்களை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுதல் என்பது சிறிய, முக்கியத்துவமற்ற கலந்துரையாடல்களைத் தவிர்க்கக் கூடும் (5:21ஐக் காணவும்). இது மூப்பருக்கு எதிரான தவறான கருத்துக்களைப் பரப்புவதையும் தடை செய்யும்.*

*இரண்டாவது, பாவம் புறக்கணிக்கப்பட்டிருப்பதில்லை என்பதை நாம் நிச்சியப்படுத்திக் கொள்ள வேண்டும் (5:20). "பாவத்தில் தொடர்ந்து" (நிலைத்து) இருப்பவர்களைப் பற்றிப் பவுல் எழுதினார். நிகழ்கால செய்வினை எச்சத்தில் உள்ள அவரது வார்த்தைகள் அந்த வேளையில் பாவம் செய்யப்பட்டுக் கொண்டிருத்தலை அல்லது பாவத்தைத் தற்சமயம் செய்து கொண்டிருத்தலைச் சுட்டிக் காண்பிக்கின்றது.[36] இது திருத்தப்படாத ஒரு சமீபத்திய பாவத்தையோ அல்லது ஒரு சில பாவத்தில் ஒருவர் தொடர்ந்து (நிலைத்து) இருத்தலையோ குறிப்பிடுகிறது. பாவத்தைக் கண்டு கொள்ளாது விடுவதற்கு மாறாக, நாம் பாவியைக் "கடிந்து கொள்ள"[37] வேண்டும். இது தனிப்பட்ட வகையிலான சில சிடுசிடுப்பு அல்ல, ஆனால் ஒரு குறிப்பிட்ட பாவம் வெளியாக்கப்பட்டுள்ள விஷயமாக உள்ளது (மத். 18:15 ஐக் காணவும்). ஒரு சந்திப்பின் போது வேதாகமம் திறக்கப்பட முடியும்; செய்யப்பட்டுள்ள எந்தத் தவறையும் அறிவிப்பதற்கு தேவனு*

டைய வசனம் தர அளவையாக உள்ளது. இப்படிப்பட்ட உரையாடலில் தனிப்பட்ட கருத்துக்களும் "இது (இப்படியாக) எனக்குக் காணப்படுகிறது" என்பவைகளும் ஆளுகை செய்வதில்லை.

மூன்றாவது, பாவத்தைக் குறித்த பதில்செயலானது எல்லாரும் "பாவம் செய்யப் பயப்படுவதற்கு" காரணமாயிருப்பதை நாம் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். அப். 5:1-11ல் அனனியா மற்றும் சப்பீராள் ஆகியோரின் பாவம் பற்றி சபையில் விவாதிக்கப்பட்ட பிறகு "சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று."

## ஒரு மூப்பர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பொழுது (வ. 21, 22)

பவுலின் கொள்கைகள் கையாளப்படுகையில், நாம் தேவனுடனும், கிறிஸ்துவுடனும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தூதர்களுடனும் - இவர்களை பயபக்திக்குரிய கேட்பாளர்களாகக் கொண்டு - செயல் படுகின்றோம். மூப்பர்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் நியமித்தலில் ஈடுபட வேண்டியவர்களின் பண்புகளைப் பவுல் முன் வைத்தார்.

1. இந்த நபர் நியாயமானவராக இருக்க வேண்டும்: "நீ பட்ச பாதத்தோடே ஒன்றும் செய்யாமலும்"[38] (5:21). இது, "நான் கற்பனை செய்ய முடியும்" அல்லது "அநேகமாக என்ன நடந்ததென்பது இங்குள்ளது" என்பவற்றிற்கான காலம் இருப்பதில்லை. அன்புடனும், நியாயத்துடன் கவனிக்க வேண்டியுள்ளவர்களைப் பற்றிய நிலையில், அவசரமான, ஆதாரமற்ற முடிவுகள் எல்லாவற்றையும் கெடுக்கின்றன.

2. இந்த நபர் பாரபட்சமற்றவராய் இருக்க வேண்டும்: "பாரபட்ச முள்ள ஆவியில் ஒன்றையும் செய்யக் கூடாது." ஒரு விஷயத்தின் "ஒரு பக்கத்தை" மட்டும் காணும்படியாக சுவிசேஷகர் மீது விசேஷித்த வலியுறுத்தம் செய்யப்படுவதை அவர் காணலாம். நெருங்கிய நண்பர்கள் பாவியை நியாயவானாக்க விரும்பலாம். பிற சகோதரர்கள், பாவத்தில் ஈடுபட்ட சகோதரரை அவமதிப்பதற்கான தங்கள் வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கலாம். சத்தியத்தைப் பேசவும் வழிகாட்டவும் அனுமதிப்பதினால் முற்றிலும் பாரபட்சமற்ற நிலையில் இருத்தல் என்பதே பாதுகாப்பான ஒரே வழிமுறையாக உள்ளது.

3. இந்த நபர் மூர்க்கமானவராக இருக்கக் கூடாது: "ஒருவன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே" (5:22). பொதுவாக, உறுப்பினர்கள் மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கையில் (அப். 6:1-6ஐக் காணவும்) புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலங்களில் அப்போஸ்தலர்கள் அல்லது சுவிசேஷகர்கள் நியமித்தல் (அல்லது பிரித்து வைத்தல்) என்ற பணியைச் செய்தார்கள். இது கைகளை வைத்தல் என்பதையும் உள்ளடக்கியிருக்கக் கூடும் (அப். 13:1-3; 1 தீமோ. 4:14ஐக் காணவும்).[39] தீத்து 1:5ல் சுவிசேஷகர் என்ற வகையில் தீத்து இவ்வாறு செய்யும்படி அழைக்கப்பட்டார்.[40] அவசரமான நியமித்தல்கள் பெரும்பாலும் ஒரு பத்தாண்டுகளுக்கு "கீழாக இருத்தலை" நீக்காத உடனடியான குழப்பத்தையும், கலவரத்தையும் அல்லது வருத்தத்தையும் மீண்டும் மீண்டும் விளைவித்தன (மத். 7:20ஐக் காணவும்).

வேதாகமத்தின்படியான செயல்முறைகளுக்கான அழைப்பின் தருணம் எப்பொழுதாவது இருக்கிறது என்றால், அது "உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிற'' (எபி. 13:17) மனிதர்களைத் தேர்ந்தெடுத்து நியமிக்கும் தருணமேயாகும் என்பது நிச்சயம்.

4. இந்த நபர், "மற்றவர்களின் பாவங்களுக்கான பொறுப்புகளில் பங்கு" வகிக்காதபடி எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். பாவத்தைத் திருத்துதல் என்பது ஒருவரைப் பாவம் செய்ய வழிநடத்துவதாக இருக்கலாம் (கலா. 6:1, 2). சகோதரர்கள் ஒருவரைக் கண்டிக்கத் தொடங்கி விட்டு, பிறகு தாங்களே கண்டித்தலுக்குரியவர்களாய் ஆவதென்பது கவலைக்குரியதாக உள்ளது (ரோமர் 2:21-24ஐக் காணவும்). பவுல் (ஒரே) ஒரு வசனத்தில், மற்றவர்களைக் கடிந்து கொள்ள அல்லது மற்றவர்களுக்குப் புத்திமதி கூறத் தகுதியானவர்கள் யார் என்பதைச் சுருக்கமாய் அடையாளப்படுத்தினார் (ரோமர் 15:14ஐக் கவனமாய்க் காணவும்).

5. இந்த நபர் ஒரு உதாரணமாய் இருக்க வேண்டும்: "உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்."[41] இவ்விஷயங்களில் நியாயமான மற்றும் உண்மை நிறைந்த முடிவைத் தரவழைப்பதற்கான உண்மையான திறவுகோல் இங்குள்ளது (தீத்து 1:15, 16ஐக் காணவும்).

தேர்ந்தெடுக்கப்படும் மூப்பர்கள் தூய்மையில் இந்த ஐந்து பண்புகளை யும் காத்துக் கொண்டால், எவ்விதமான தவறான முடிவும் அறிவிக்கப் படாது மற்றும் தகுதியுள்ள சகோதரர்கள் மாத்திரமே நியமிக்கப் படுவார்கள்!

## தீமோத்தேயுவின் உடல் நலத்திற்கான பொருள் சிதைவற்ற அறிவுரை (5:23)

செய்யத் தேவையான எல்லாவற்றையும் செய்கின்ற சுவிசேஷகர் எவரும், அழுத்தம், வலியுறுத்தம் மற்றும் உடல் நலத்தைத் தாக்கும் வியாதிகள் ஆகியவற்றை எதிர்கொள்ளுவார். தீமோத்தேயுவை ஒரு மகனென்று அறிந்த பவுல், தீமோத்தேயுவின் எதிர்கால ஊழியத்தில் அவர் நீண்ட நாட்கள் இருக்க வேண்டும் என்பதற்காக சில நடைமுறை ஆலோசனைகளை அளித்தார்.

வசனம் 23ல் பவுல் "உன் வயிற்றிற்காகவும் ... கொஞ்சம் திராட்ச ரசமும் [Gk.: *oinos*] கூட்டிக் கொள்" என்று வற்புறுத்தினார். *Oinos* என்பது ரோமர் 14:21 அல்லது எபேசியர் 5:18ல் இதன் பயன்பாட்டிலிருந்து தெளிவாகின்றபடி புளித்த திராட்ச இரசத்தைக் குறிப்பிடக் கூடும் அல்லது மாற்கு 2:22 மற்றும் யோவான் 2:3ல் இதன் பயன்பாட்டிலிருந்து தெளிவாகிறபடி, புளிப்பில்லாத திராட்ச இரசத்தைக் குறிப்பிடக் கூடும். (Gk.: *oinon neon* - புதுத் திராட்ச இரசம்). இதே வார்த்தையானது 1 தீமோத்தேயு 3:8 மற்றும் தீத்து 1:7ல் பயன்படுத்தப்பட்டுள்ளது, இவ்விடங்களில் குறிப்பிட்ட சிலருக்கு மதுபானத்தை மட்டுமீறி அருந்துதல் அல்லது அதற்கு அடிமையாகுதலுக்கு எதிராக எச்சரிக்கை அளிக்கப் படுகின்றது. பவுல் இவ்விடத்தில் (5:23) அர்த்தப்படுத்தியது எவ்வகை

*யானதாக இருப்பினும், பவுல் இவ்விடத்தில் தவறான பயன்பாடு பற்றி யல்ல ஆனால் தக்க வகையிலான பயன்பாட்டையே கலந்துரையாடினார்.*

*இன்றைய நாட்களில் சில நாடுகளில் கொதிக்க வைக்காத தண்ணீ ரானது வயிற்றுப் போக்கையும் மற்றும் பிற சுகவீனங்களையும் வரவழைப் பதாக உள்ளது. திராட்ச இரசம் அதன் செய்முறையினால் அவ்விதமான அசுத்தங்கள் அற்றதாக இருந்து உள்ளது. இதைச் சிந்தையில் கொண்டு, பவுல் கூறியதையும் கூறாததையும் கவனியுங்கள்.*

*ஒரு நேர்மையான பாடம் இங்குள்ளது! ஒருவர் தமது உடல்ரீதியான நோய்களுக்கு செய்யக் கூடியதென்ன என்ற வகையில் திராட்ச இரசத்தின் சரியான பயன்பாடானது ஏவுதல் பெற்ற ஒரு ஆலோசனையாகத் தரப் பட்டுள்ளது. பவுல் தீமோத்தேயுவின் வயிற்றைப் பற்றி மட்டும் குறிப் பிடாமல், அவருக்கு அடிக்கடி நேரிட்ட பலவீனங்களைக் குறித்தும், அவர் ஏதாவது செய்யும்படி அறிவுறுத்தினார். லூக்கா 5:31ல் கிறிஸ்துவின் பொதுவான அறிவுக் கூற்றாவது: ''பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை.'' மருத்துவ உதவியை முற்றிலுமாக மறுத்தல் என்பது கிறிஸ்துவின் போதனைக்கோ அல்லது தீமோத்தேயுவுக்குப் பவுலின் குறிப்புகளுக்கோ பொருந்தி வருவதில்லை. ஒரு பிரச்சனையிலிருந்து ஒளிந்து கொள்ள முற்படுதல் என்பது அப்பிரச்சனையைத் தீர்த்து வைக்காது. தாமதப்படுத்துதல் என்பது அபாயகரமானதாகலாம். இதன் மீது ஒருவர் கொண்டுள்ள கண்ணோட்டம் என்னவாயிருப்பினும், ஒருவர் நோயுற்று இருந்தால், அதைப் பற்றி ஏதாவது செய்யப்பட வேண்டும் என்று யாக்கோபு 5:14 மெய்ப்பிக்கிறது. மத குழுக்கள் சில, நீங்கள் மருத்துவரிடம் சென்றால் உங்களுக்குத் தேவன் மீது விசுவாசம் இல்லை என்று கூறுகின்றன, இது வேதாகமரீதியானதல்ல.*

*இவ்விடத்தில் எதிர்மறையான பாடம் ஒன்றும் தரப்படுகின்றது. சிலர், மதுபானத்தைப் பல்வகையான வடிவங்களில் பயன்படுத்துவதை நியாயப் படுத்துவதற்கு இவ்வசனப் பகுதியைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். பின்வரும் கேள்விகளுக்கு நாம் நேர்மையாய்ப் பதில் அளிப்போமாக:*

*1. இவ்வசனப் பகுதியின் காரணமாக திராட்ச மதுவை அருந்துதலை வலியுறுத்தும் ஒருவர், தண்ணீர் குடிப்பதை நிறுத்தி விடுகிறாரா? வசனத்தைக் கவனமாய் வாசியுங்கள்.*

*2. இவ்வசனப் பகுதியிலிருந்து திராட்சை மது அருந்துதலை நியாயப்படுத்த முயற்சிக்கிற ஒருவர் எப்பொழுதுமே “கொஞ்சம் திராட்சை மதுவுடன்'' நிறுத்திக் கொள்ளுகின்றாரா? இல்லையென்றால் அவர், தீமோத்தேயுவுக்குப் பவுல் கூறியவற்றுக்குக் கீழ்ப்படிந்துள்ளாரா?*

*3. மது அருந்துதலை இவ்வசனத்திலிருந்து நியாயப்படுத்த முயற்சி செய்கின்றவர் (விஸ்கி, பீர் மற்றும் பிற மதுபான வகைகளை அருந்தாமல்) கொஞ்சம் திராட்ச ரசம் மாத்திரம் அருந்துகிறாரா?*

*4. மது அருந்துவதை இவ்வசனத்திலிருந்து நியாயப்படுத்த முயற்சி செய்கின்றவர் “[அவரது] வயிற்றிற்காக'' அல்லது “அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காக கொஞ்சம் திராட்ச ரசத்தைக் கூட்டிக் கொள்ளுகிறாரா?”*

*எவ்விதமான தீய பாதிப்புக்கும் காரணமின்றி அல்லது இடர்ப்பாடு*

உண்டாக்கும் கேள்விகளை எழுப்பாத நிலையிலேயே நாம் நமது பலவீனங்களுக்குப் பல வகையான மருந்துகளை பயன்படுத்தக் கூடிய ஒரு கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். கிறிஸ்தவர் தம்மைக் குறித்துத் தீமையாக எதுவும் பேசப்படாதவாறு வாழ வேண்டியவர்களாய் இருக்கின்றார் (2 கொரி. 8:20, 21; 1 கொரி. 10:28-33; 1 பேதுரு 3:15-17; ரோமர் 14:16, 21 ஆகியவற்றைக் காணவும்). இவ்வழி முறையில் வாழ விரும்புகிற எவரும், (திராட்சை மதுவோ அல்லது வேறெதுவுமோ) அருந்துதல் என்பது மிகவும் தகாததாக உள்ளது என்பதை உணர்ந்து அறிவார்!

## பாவத்தின் விளைவுகள் தீமையானவைகளாயும் தப்பிக்க முடியாதவைகளாயும் இருக்கின்றன (5:24, 25)

ஒரு பாவமானது துவக்கத்திலேயே வெளிப்படையாக மெய்ப்பிக்கப் பட்டிருந்தாலும் அல்லது பிற்பாடு வெளிப்படுத்தப்படும் நிலையில் இருந்தாலும், *நமது பாவங்கள் அறியப்படும் என்ற உண்மையிலிருந்து நாம் தப்பிக்க முடியாது* (5:24; எண். 32:23ஐக் காணவும்). சில பாவங்கள் "வெளியரங்கமாய் உள்ளன" என்பதை அறிந்த நிலையில், நாம் உண்மைகளை ஆராய்ந்து, தேர்ந்து, அவசரமான முடிவுகளையும் செயல்பாடுகளையும் தவிர்க்க வேண்டும் (5:22). எல்லாவற்றையும் காணுகின்ற தேவனுக்கு முன்பாக "மூடி மறைக்கும் செயல்பாடுகளை"(எபி. 4:12, 13)யும், எவ்வகையிலாவது பிற்பாடு கண்டறியப்படக் கூடியதான வகையில், சகோதரர்களைப் புண்படுத்துதலையும் தேவன்தான் மன்னிக்க வேண்டும் (5:25).

பாவம் செய்வதற்கான தூண்டுதல் பண்புகள்/பாணிகள் இந்த அதிகாரம் முழுவதிலும் விரவியுள்ளன (5:6, 11-13, 20-22). பாவம் உள்ள இடத்தில் நாம் யோசேப்பு செய்ததைச் சிந்தித்தலும் (ஆதி. 39:9) மற்றும் சங்கீதக்காரர் செய்தது போல ஜெபித்தலும் (சங். 19:12-14) அவசியம் என்பது பவுலின் பாடத்தினுடைய தொகுப்புரையாக உள்ளது.

## பாடம் 17: அடிமைகள் மற்றும் எஜமானர்களுக்கான பரிவு (6:1, 2)

கிறிஸ்தவம் எந்த ஒரு கலாச்சாரத்தினுள்ளும் மற்றும் மாறுபடும் நபர்த்துவங்களிலும் பிரவேசித்து, கலந்து பணி செய்யக் கூடிய மற்றும் மகிழ்வான உறவுகளைக் கூட ஏற்படுத்த முடியும் (கலா. 3:26-28). அடிமைத்தனத்தின் கலாச்சார நடைமுறை ஆதிக்கம் பெற்ற தன்மையாய் இருந்த முதல் நூற்றாண்டில் இப்பிரச்சனையை அது மாபெரும் அளவில் எதிர்கொண்டது. இந்தத் துறையில் கூட பவுல், கிறிஸ்தவர்கள் பின்பற்ற பாராட்டத்தக்க ஒரு ஓட்டத்தை வடிவமைத்தார்.

## மறுசெயல்

அடிமைகள் "தங்கள் சொந்த எஜமானர்களை எல்லாக் கனத்திற்கும் பாத்திரரென்று எண்ண வேண்டும்" (6:1). இவ்விடத்தில் "கனம்"[42] என்ற வார்த்தை மீண்டும் வருகிறது (5:3, 17). இவ்விடத்தில் "மற்றவர்களைத் தாழ்வாகக் கருதும் ஒருவருக்கு" கனம் செலுத்த வேண்டும் எனப்படுகிறது. அந்தக் கனம் எவ்விதம் காண்பிக்கப்படலாம் மற்றும் அதில் உள்ளடங்கியுள்ளது என்ன என்பவற்றை எபேசியர் 6:5-8 வசனப் பகுதியானது சுட்டிக் காண்பிக்கின்றது. இதுதான் இரண்டாவது மைல் வாழுதல் நடக்குமிடமாக (மத். 5:38-42ஐக் காணவும்), கர்த்தருடைய உயர்வான பிரமாணத்திற்கான ஒருவரின் அர்ப்பணித்தலானது தற்கால சமூக விதிகள் அல்லது ஒழுங்கு முறைகளுக்கு அப்பால் செல்லுவதாக உள்ளது. இவ்வகையான ஊழியம் வனப்பு மிக்கதாக உள்ளது. ஒருவர், தம்மிடத்தில் கேட்கப்பட்டதற்கும் அப்பால் சென்று தேவபக்தியுள்ள செயலை அல்லது கிறிஸ்துவைப் போன்ற ஊழியத்தைச் செய்கின்ற பொழுது கட்டுப்படுத்துபவராக யார் இருக்கின்றார் என்பதை ஒருபொழுதும் சந்தேகிக்கக் கூடாது (ரோமர் 12:20, 21).

## காரணம்

வேத வசனங்களில் வேண்டிக் கொள்ளப்படும் இரண்டாவது மைல் ஊழியம் என்பது அறிவுக்கு ஏற்புடையதாக உள்ளது. "தேவனுடைய நாமமும் உபதேசமும் தூஷிக்கப்படாதபடிக்கு"[43] நாம் இவ்வகையில் ஊழியம் செய்ய வேண்டும். தேவனுடைய நாமம் தூஷிக்கப்படாதபடி மக்கள் செயல்படக் கூடிய மூன்று வழிகளை வேதாகமம் காண்பிக்கின்றது (சங். 74:18-23ஐக் காணவும்).

தேவனுடைய நாமத்துக்கும் அவரது/நமது உபதேசத்துக்கும் கனவீனத்தைக் கொண்டு வருமாறு நமது நடக்கையானது அமையக் கூடும் என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும். தேவன் நம்மை அவருடன் ஊழியத்தில் பிரயாசப்பட அனுமதிப்பார் என்ற உண்மையானது, நாம், அவருக்குக் கனம் செலுத்தும் வகையில் ஊழியம் செய்ய (1 கொரி. 3:9; மத். 5:16; 1 தீமோ. 2:1-4; 4:12-15) மற்றும் நமது உபதேசத்தை நாம் அலங்கரிக்க (தீத்து 2:10) காரணமாக வேண்டும்.

## பலன்கள்

தேவனுடைய நியாயமான வேண்டுகோள்களை நாம் நடைமுறைக்குக் கொண்டு வந்தால் அவை சமுதாயக் காட்சியில் அற்புதங்களைச் செய்யக் கூடும். ஒரு அடிமை அல்லது ஊழியக்காரர்/வேலைக்காரர், விசுவாசமுள்ள எஜமானர் ஒருவரிடத்தில் மரியாதையற்றவராய்[44] இருக்கக் கூடாது. அவர்கள் தங்கள் இருவருக்கும், தம்மையே கொடுத்த கிறிஸ்துவுக்குள் இருப்பதன் பயன்களை[45] பகிர்ந்து கொள்கின்றனர் (2 கொரி. 5:14, 15; பிலே. 15-20).

பார்க்ளே கூறிய பின்வரும் வார்த்தைகளை நாம் கவனிக்கும் பொழுது பவுல் கூறியவற்றின் நடைமுறை முக்கியத்துவம் மிகவும் தெளிவானதாக உள்ளது:

> *ரோமப் பேரரசில் சுமார் 60,000,000 அடிமைகள் இருந்தார்கள். அடிமைகளின் எண்ணிக்கையின் காரணமாக மட்டுமே கூட அவர்கள் வலிவார்ந்த விரோதிகளாகக் கருதப்பட்டனர். அடிமைகள் எழுச்சியை ரோமப் பேரரசு அனுமதிக்க/தாங்க முடியாததாக இருந்த காரணத்தினால் எப்பொழுதாவது அடிமைகள் புரட்சி செய்தால், அது இரக்கமற்ற வலிவுடன் அடக்கப்பட்டது. ஒரு அடிமை ஓடிப் போயிருந்து, பின்பு பிடிக்கப்பட்டால், ஒன்று அவர் மரண தண்டனை பெறுவார் அல்லது அவரது நெற்றியில் F என்ற எழுத்து முத்திரையாகக் குத்தி அடையாளம் இடப்படும், இது ஓடிப்போனவன் என்று அர்த்தப்படுத்தும் fugitivus என்ற சொல்லைக் குறிக்கும் ... E.K. சிம்ப்சன் அவர்கள் பின்வருமாறு ஞானத்துடன் எழுதுகிறார்: "நீறு பூத்த நெருப்பாயிருந்த இனவெறுப்பை இரையுண்ணும் அக்கினியாகும்படி கிளறி விடுவதால் அல்லது ஓடிப் போன அடிமைகளுக்குத் தனது மடியில் ஒரு புகலிடத்தைத் திறப்பதினால் கிறிஸ்தவத்தின் ஆவிக்குரிய முகாமானது மிக மோசமாக சீரழிந்து போயிருந்திருக்கும்.'' அடிமைகள் தங்கள் எஜமானர்களுக்கெதிராக புரட்சியும் கலகமும் செய்து அவர்களுக்கெதிராக எழும்பும்படி சபையானது உற்சாக முட்டி யிருந்தால் அது சபைக்குப் பேரழிவைக் கொண்டு வந்திருக்கும். அது, உள்நாட்டுப் போர், பெருந்திரள் கொலை, மற்றும் சபையின் மீது முழுமையான அவமதிப்பு ஆகியவற்றிற்கே காரணமாகியிருக்கும்.*[46]

குழப்பத்திற்குக் காரணமாய் இருக்கக் கூடியதென்று வில்லியம் பார்க்ளேயும் E. K. சிம்ப்சனும் முன்வைத்த கருத்துக்கு மாறாக, பவுல், தவறான பயன்பாடுகள் சாதாரணமானவைகளாய் உள்ள சமூக வட்டாரங் களில் வேத வசனங்கள் எவ்வாறு வழிநடத்துகின்றன என்பதற்கு அழகுமிக்க எடுத்துக்காட்டு ஒன்றைக் கொடுத்தார். "அமைப்பு முறையைக் கண்டனம்" செய்ய முயற்சிப்பதற்கு மாறாக, தெய்வீகக் கொள்கைகள் எந்த அமைப்பு முறையிலும் உள்ள மக்களை அதற்குக் கீழ்ப்படிந்து நடந்தால் அது பணி புரியத் தக்க மற்றும் வாழத் தக்க உறவாகின்றது என்ற வகையில் மக்களை உருவாக்குகின்றன. அடிமை மற்றும் எஜமானர் ஆகிய இரு சாராரும் தேவபக்தியுள்ள பண்புகளை[47] வெளிப்படுத்தினால் அவ்விரு சாராருக் கிடையில் உள்ள உறவானது தாங்கக் கூடியதாகவும் செயல் விளைவுள்ள தாகவும் இருக்கிறது. *எல்லா மக்களின் இரட்சகராய் இருப்பவருக்கு அடிமைப்படுதல் குறித்து யாரேனும் அவமானமாக உணருகின்றாரா?*

## தொகுப்புரையாக

வயது வித்தியாசங்கள், தொடர்புகள், பணி ஒப்படைப்புகள், சமூக அழுத்தங்கள் மற்றும் வடிவமைப்புகள், ஆவிக்குரிய ஊழியங்கள், மற்றும் பாவத்தின் மயக்கங்கள் ஆகியவற்றின் மாறுபாடுகள் மீது பவுல் 5:1-6:2ல்

*என்ன ஒரு அழகிய செய்தியைக் கொடுத்தார்! ஏவுதல் பெற்ற பவுலின் எழுது கோலானது இவ்வாழ்க்கை தரக்கூடிய மனித உறவுகள் யாவற்றுக்கும் அறைகூவல் விடுத்து, பக்குவப்படுத்தி, கலந்து மற்றும் சகோதரர்களைக் கட்டி எழுப்ப திறன் மிக்க வகையில் இயங்கிற்று!*

---

*குறிப்புகள்:*

[1]*இந்தப் பிரிவில் 1 தீமோத்தேயு 6:1, 2ஐ உள்ளடக்குதல் என்பது மிகவும் நடைமுறைக்குரிய புறக்குறிப்புப் பிரிவாகக் காணப்படுகிறது. 5ம் அதிகாரத்தில் உள்ள தொடர்புகள் அதிகாரம் 6ன் இவ்விரு வசனங்களை உள்ளடக்கச் சிந்தனை களை எடுத்துச் செல்வதாகக் காணப்படுகிறது.* [2]*இளம் மக்கள் துரிதமாய், தூண்டுதலுக்குட்பட்டு, மற்றும் பொறுமையற்று இருக்க விழைக்கின்றனர். முதிய மக்கள் சிலருக்கு இடித்துரைத்தல் தேவைப்படலாம், ஆனால் இது கண்டித்தலி னாலோ அல்லது திட்டுதலினாலோ செய்யப்படுவதற்கு மாறாக வேண்டு கோளினால் செய்யப்பட முடியும்.* [3]*கடிந்து கொள்ளுதல்* (Gk.: *epiplesso*) - *"மேல் தாக்குதல், மேல் அடித்தல் ... வார்த்தைகளினால் சிட்சித்தல், ..."* (C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer [Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint ed., Grand Rapids, Mich.: Baker Book House, 1977], 241). [4]*புத்தி சொல்லுதல்* (Gk.: *parakaleo*) - *"இரத்தல், கெஞ்சுதல், வேண்டுகோள் விடுத்தல், தேற்றுதல், ஆறுதல் செய்தல், உற்சாகப்படுத்துதல், அறிவுறுத்துதல்"* (Thayer, 482-83). [5]*"சிசெரோ என்பவர் பின்வருமாறு எழுதினார்: 'எனவே இது ஒரு இளம் மனிதர் தமது மூப்பர்களுக்குத் தற்பாதுகாப்பைக் காண்பித்தல், மற்றும் அவர்களின், ஆலோசனை மற்றும் செல்வாக்கினால் பயனடையும்படியாக அவர்களுக்குத் தம்மால் ஆன மிகச் சிறந்தவற்றைச் செய்யவும் அவர்களால் மிகவும் அங்கிகரிக்கப்பட்டிருத்தலும் அவரது கடமையாக உள்ளது ...'* (Cicero, *De Officiis,* 1:34) ... *சற்றுக் கூச்சத்துடன் கூறப்படும் பிரென்ச்சு கூற்றொன்று உள்ளது: 'இளமையானது அறிவைக் கொண்டுள்ளதாயிருந்தால், முதுமையானது பலத்தைக் கொண்டுள்ளதாயிருந்தால் (நன்று).' ஆனால் பரஸ்பரம் மரியாதை இருக்கின்ற பொழுது ... முதுமையின் ஞானமும் அனுபவமும் இளமையின் பலத்துடனும் சாதனையுடனும் ஒத்துழைக்க முடியும், அது இரு சாராருக்கும் மாபெரும் ஆதாயமாய் இருக்கும்"* (William Barclay, *The Letters to Timothy, Titus and Philemon,* The Daily Study Bible Series, rev. ed. [Philadelphia: Westminster Press, 1960], 120). (See Philippians 2:22.) [6]*எந்த ஒரு கிறிஸ்தவ சகோதரரும், விசேஷமாக ஒவ்வொரு பிரசங்கியாரும் "உள்ளான ஒரு யுத்தம், காமத்தின் விலாவாரியான ஆய்வு" என்ற பெயர் குறிப்பிடப்படாத கட்டுரையை* (*Leadership Magazine* [Fall Quarter, 1982]: 30-48) *வாசிக்கும்படி பலமாகப் பரிந்துரைக்கப்படுகிறது.* [7]William Hendriksen, *A Commentary on 1 & 2 Timothy & Titus* (London: The Banner of Truth Trust, 1964), 166. [8]*கற்பு* (Gk.: *hagnos*) - *"பரிசுத்தமாய், ... (பாவத்திலிருந்து) சுத்தமாய் இருத்தல், 1 தீமோத்தேயு 5:22 ... ஒன்றும் அறியாமை"* (Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich [Chicago: University of Chicago Press, 1957], 11-12). [9]*ஆதி. 39:1-12; 2 கொரி. 8:20, 21; 1 கொரி. 10:31-33; மத். 5:27, 28; 1 தெச. 4:3-7 ஆகியவற்றைக் காணவும்; நீதி. 7:6-27; 6:20-35; 9:13-18 ஆகியவற்றைக் கவனமாய் வாசிக்கவும்.* [10]*மதிப்பு* (Gk.: *time*) - *"... மதிப்புள்ள, தகுதிகொண்ட, மதித்தல் ... (சமுதாயத்) தகுதி, வேண்மை ... சாதகம்"* (Edward Robinson, *A Greek & English Lexicon of the New Testa-*

*ment* [New York: Harper & Brothers, 1863], 721); *“மற்றவர்களை விடத் தகுதி பெற்றுள்ள ஒருவருக்குக் காண்பிக்கப்படும்” மரியாதை* (Thayer, 624).

[11]*பக்தி* (Gk.: *eusebeo*) - *‘‘பயபக்தி, ஆராதனை ... பெற்றோர்களிடம் கொண்டுள்ள மரியாதை, மதிப்பு’’* (Robinson, 307). [12]*திரும்பச் செய்தல்* (Gk.: *apodidomi*) - *“ஒருவர் தம் சொந்தமானதை விடுவித்தல், ஒப்புக் கொடுத்தல் ... கடனைச் செலுத்துதல், நீக்குதல் ... நன்றியுணர்வு* [*திரும்பச் செலுத்துதல்*]*”* (Thayer, 61). [13]Barclay, 124. [14]*யாத். 22:22; உபா. 10:17-19; 24:19-21; 26:12; 27:19; சக. 7:9, 10; மல். 3:5; அப். 6:1-6; யாக். 1:27 ஆகியவற்றைக் காணவும்.* [15]Barclay, 125. [16]*தனிமையில் விடப்படுதல்* (Gk.: *monoo*) - *“பிள்ளைகளின்றி ... ஒற்றையாளாக அல்லது தனியாளாக இருத்தல்”* (Thayer, 418). *இச்சொற்றொடர் (“கை விடப்பட்ட”;* ASV*) “விதவை” என்பதை அமைக்கின்ற திறவுகோலைக் கொண்டுள்ளது. சபையானது கவலை யற்றிருந்தாலும், தேவன் நம்முடைய தேவைகளை அறிகிறவராய் இருக்கிறார் என்று பவுல் கூடுதலாக விளக்குகிறார். ஆகையால், விதவை தனது கவலையை அவர் மீது வைத்து விட வேண்டும் (1 பேது. 5:6, 7; மத். 6:25-34).* [17]*சுகபோக சந்தோஷம்* (Gk.: *spatalao*) - *“... வரம்பற்ற களியாட்டம் கொண்டு வாழுதல், ஆடம்பரம் ... ஆடம்பர மாய் வாழுதல் ...”* (Thayer, 585). [18]Marvin R. Vincent, *Word Studies in the New Testament,* vol. 4 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1957), 260. [19][*அவளை*] *பட்டியலில் இடுதல்* (Gk.: *katalego*) - *“... ஒரு பதிவேட்டில் இடுதல், பதிவு செய்தல் (விசேஷமாக படை வீரர்கள்; ...): சபையில் சிறப்பிடம் பெற்ற அந்த விதவைகளைப் பற்றியது ... , மற்றும் பொதுச் செலவில் உதவி பெறும் விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான பொறுப்புக் கொண்டிருத்தல்”* (Thayer, 333). [20]Vincent, 261.

[21]*வசனம் 10ல் ‘‘பெற்றவளுமாயிருந்தால்’’ என்ற வாக்கிய உறுப்பைக் கவனிக்கவும். “ஆல்” என்பது கிரேக்க மொழியில் ei என்பதுடன் சுட்டுச் சொல் சேர்ந்து வருவதாக உள்ளது. இது மற்ற இடங்களில் “ஆல்” என்பது, நிபந்தனை யானது நிறைவேற்றப்படாதது என்ற வகையில் தீர்மானிக்கப்பட்ட நிபந்தனை வினையுடன் இணைக்கப்பட்டிருத்தலுக்கு நேர் மாறாக “நிபந்தனையானது நிறைவேற்றப்பட்ட வகையில் தீர்மானிக்கப்பட்டதை” முன்னிறுத்துகிறதென்று* W. H. *டேவிஸ் அவர்கள் சுட்டிக் காண்பித்தார். சாத்தான் இயேசுவைச் சோதித்தலில் இதன் இரு வடிவங்களையும் பயன்படுத்திய இடமான மத்தேயு 4:3, 9ல் “ஆல்” என்பதன் எதிரெதிரான பயன்பாடுகளைக் கவனிக்கவும். வசனம் 3ல் பிசாசானவன் ei என்பதுடன் சுட்டுச் சொல்லைப் பயன்படுத்தினான், இவ்விதமாக அவ்வசனத்தில், “நீர் தேவனுடைய குமாரனேயானால், ...” என்று கூறப்படுகின்றது* (W. H. Davis, *Beginner’s Grammar of the Greek New Testament* [New York: Harper & Brothers Publishers, 1923], 68, 88). *இந்த விதவை இவற்றைச் செய்திருக்கிறாள் - நிபந்தனை நிறைவேற்றப்பட்டுள்ளது.* [22]*அர்ப்பணித்த* (Gk.: *epakoloutheo*) - *“... பின்பற்றுதல், துணையிருத்தல் ... அவரது உதாரணத்தைப் பின்பற்றுதல் ... நற்பணி ஒவ்வொன்றையும் நெருங்கிப் பின்பற்றுதல், அதாவது, ஆர்வத்துடனிருத்தல், அர்ப்பணித்திருத்தல், 1 தீமோத்தேயு 5:10”* (Robinson, 266). KJV*யானது, “... நற்செயல் ஒவ்வொன்றையும் அவள் ஊக்கத்துடன் பின்பற்றியிருந்தால்” என்று கூறுகிறது.* [23]*உணர்வுரீதியான விருப்பங்கள்* (Gk.: *katastreniao*) - *“... பாலியல் விருப்பத்தின் தூண்டுதலை உணருதல்”* (Thayer, 337); *“... அவர்களைக் கிறிஸ்துவிடத்திலிருந்து விலக்கக் கூடிய உணர்வு ரீதியான தூண்டுதல்”* (Arndt and Gingrich 420). [24]*வாக்குறுதி* (Gk.: *pistinis*) - *“எந்த விஷயத்தையும் பற்றிய உறுதிப்பாடு, ... தேவன் மற்றும் தெய்வீக விஷயங்களுடன் மனித உறவை மதிக்கும் உறுதிப்பாடு அல்லது விசுவாசம், பொதுவாக விசுவாசத்தினால் பிறந்து அதனுடன் ஒன்றிணைந்த நம்பிக்கை மற்றும்*

பரிசுத்த வைராக்கியத்தின் கருத்தானது உள்ளடக்கப்படுகின்றது" (Thayer, 512-14). [25]கைவிடுதல் (Gk.: *atheteo*) - "விலகுதல் ... எந்த ஒரு விஷயத்தையாவது அது செல்லத் தகாதது என்பது போலச் செயல்படுதல்; எனவே கருத்துக்களினால் ஒரு வலிமையின் விதியை/சட்டத்தை இழக்கச் செய்தல் அல்லது அதற்கு எதிராகச் செயல்படுதல் ... புறக்கணித்தல், மறுத்தல், முக்கியமற்றதாகக் கருதுதல்" (Thayer, 13-14). [26](சுற்றித்) திரிதல் (Gk.: *perierchomai*) - "... ஊர் சுற்றுகிறவர்கள், அலைகின்றவர்கள் ... [வட்டம் அடிக்கின்ற] கப்பலோட்டிகள் பற்றியது ... வீடு வீடாகத் திரிதல்" (Thayer, 502). [27]புறங்கூறுதல் (Gk.: *phluaros* from *phloo*) - "(... 'கொதித்தல்,' 'குமிழ்களை எறிதல்' ... ; குமிழ்கள் வெறுமையானவைகளும் பயனற்றவைகளுமாயிருப்பதால் 'வெறுமை யான மற்றும் மதியீனமான பேச்சில் ஈடுபடுதல்'); நபர்களைப் பற்றி அற்பமான வற்றைக் கூறித் திரிதல் அல்லது செய்தல், ... உளறித்திரிதல் ... அற்பத்தனமாயிருத்தல், வீணானவை'' (Thayer, 655). [28]வீண் அலுவற்காரர்கள் (Gk.: *periergos*) - "அற்பமானவற்றில் தீவிரமாகவும் முக்கியமான விஷயங்களில் புறக்கணிப்புத் தன்மையும் கொண்டுள்ளவர்கள், விசேஷமாக மற்ற நபர்களின் விஷயங்குறித்து மும்முரம் காட்டுபவர்கள் ..." (Thayer, 502). [29]குற்றம் சாட்டுதல் (Gk.: *loidoiria*) - "... வாய்ச் சொல்லால் திட்டுதல் ..."; விதவையானவள், "விரோதியானவன் நிந்திக்க இடம் கொடுக்கலாகாது" (Arndt and Gingrich, 480). [30]விசாரணை (Gk.: *proistemi*) - "முன்பாக அமைத்தல் அல்லது இடுதல்; மேலாக அமைத்தல் ... தலைமையேற்றல் ... தலைமையாளராக அல்லது பாதுகாவலராக இருத்தல்; உதவியளித்தல் ... பராமரித்தல், கவனித்தல்'' (Thayer, 539-40); "... ஊக்கத்துடன் கவனித்தல், நடைமுறைப்படுத்துதல், பராமரித்தல்" (Robinson, 620).

[31]பிரயாசப்படுதல் (Gk.: *kopiao*) - "... களைப்படைதல், இளைப்படைதல், (உழைப்பு அல்லது சுமைகள் அல்லது வருத்தத்தினால்) சக்தி தீர்ந்து போகுதல் ... தேவனுடைய இராஜ்யத்தை அறிவிப்பதிலும் வளரச் செய்வதிலும் போதகர்களின் கடினமான முயற்சிகள் பற்றியது ... 1 தீமோ. 5:17 ... 1 தெச. 5:12 ... 1 தீமோ. 4:10 ..." (Thayer, 355). [32]இவ்விடத்தில் "பிரசங்கித்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *logo* என்ற கிரேக்கச் சொற்றொடர் ("the word"; KJV) கொலோ. 3:17; 1 தீமோ. 4:12; மற்றும் யாக். 3:2ல் உள்ள அதே சொற்றடராகவே இருக்கிறது. "சுட்டுச் சொல் விடப்பட்டுள்ளதென்பது ... வசனத்தை அல்லது தேவனுடைய வசனத்தைப் பேசு அல்லது பிரசங்கி என்ற நிலையான சொற்றொடருக்கான இவ்விடத்துக் குறிப்பை மறைக்கின்றது" (W. Robertson Nicholl, *The Expositor's Greek Testament*, vol. 4 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1961), 134. [33]வசனம் 3ல் "கனம்" என்பதற்கு காலம் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது, இவ்விடம் தவிர இது தகுதியான மூப்பருக்கு இரட்டிப்பானதாய் இருக்க வேண்டும். [34]பாத்திரர் (Gk.: *axios*) - "... எடை, மதிப்பு போன்றது பற்றிய ... மதிப்பு, விலை பற்றிப் பேசப்படுதல் ... எந்த விஷயத்துடனும் ஒப்பிடத் தகுதியான ... தகுதி கொண்டுள்ள ... தக்க, தகுதி வாய்ந்த ... மரியாதை" (Robinson, 66). [35]Don DeWelt, *Paul's Letters to Timothy and Titus* (Joplin, Mo.: College Press, 1961), 105. [36]H. E. Dana and J. R. Mantey, *A Manual Grammar of the Greek New Testament* (New York: Macmillan Co., 1948), 230. [37]கடிந்து கொள்ளுதல் (Gk.: *elegcho*) - "குற்றந் தீர்த்தல், மறுத்தல், தவறை வலியுறுத்தல், பொதுவாகக் குற்றம் தீர்க்கப்பட்ட நபரின் வெட்கக் கேடு பற்றிய கருத்துடன் கூடியது ... குற்றந் தீர்த்தலினால் வெளிச்சத்திற்குக் கொண்டு வருதல், வெளிப்படுத்துதல் ... கிறிஸ்தவம் பற்றி கள்ள போதகர்களின் போக்கினை வெளிப்படுத்த, தவறை உணர்த்தப் பயன்பட்டது, தீத்து 1:9, 13 ... தவறைக் கண்டறிந்து, திருத்துதல் ... வார்த்தையினால் கடினமாய் குற்றம் கூறுதல், ... புத்தி கூறுதல், கடிந்துரைத்தல் ... கணக்கொப்புவிக்க அழைத்தல், ஒருவரின் தவறைக் காண்பித்தல்; விளக்கம் கேட்டல்" (Thayer, 202-3).

[38]பட்சபாதம் (Gk.: *prokrima*) - "... உண்மைகள் அறியப்படு முன்பாக ஏற்படுத்தப் பட்ட கருத்து, முன்னதாக நியாயந் தீர்த்தல், தவறான எண்ணப் போக்கு" (Thayer, 540). [39]அப். 14:23ல் (*cheirontoneo* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்த) "ஏற்படுத்தி வைத்து" என்ற வார்த்தையானது நீட்டிய கைகளுடன் நியமித்தல் அல்லது தேர்ந்தெடுத்தல் என்று அர்த்தப்படுகிறது (Thayer, 668). [40]*A Re-Evaluation of the Eldership* by Dayton Keesee (Abilene, Tex.: Quality Publications, 1967, 57-63) என்ற நூலில், நியமித்தல் மற்றும் "கைகளை வைத்தல்" என்பவைப் பற்றி முழுமையான விளக்கம் தரப்பட்டுள்ளது.

[41]காத்துக்கொள்ளுதல் (Gk.: *terei* என்பது *tereo* என்பது நிகழ்கால, கட்டளைச் செய்வினையாக உள்ளது) - "கவனித்துக் காத்துக் கொள்ளுதல், காவல் இருத்தல் ... பற்றிக் கொள்ளுதல், நிறுத்தி வைத்தல், அழியாமல் காத்தல், பாதுகாத்தல், ... உற்று நோக்கல், நிறைவேற்றுதல், கவனம் செலுத்துதல் ... எனது செயல்களை இருதயத்திற்கு எடுத்துச் செல்கின்றவர்" (Arndt and Gingrich, 822-83). [42]கனம் (Gk.: *time*) - "மற்றவர்களுக்கு மேலாகத் தலைசிறந்து விளங்கும் ஒருவருக்கு அளிக்கப்படும் கனம் ... 1 தீமோ. 1:17; 6:16 ... ஒருவர் தாம் கொண்டுள்ள பணி நிலையின் தரம் அல்லது நிலையின் காரணமாக கொண்டுள்ள, மதிப்பு, எபி. 5:4" (624) என்பது இவ்விடத்தில் விசேஷமாகப் பயன்படக் கூடிய தாயெரின் விளக்கத்தின் பாகமாக உள்ளது. [43]தூஷிக்கப்படுதல் (Gk.: *blasphemeo*) - "... துன்மார்க்கமாய்ப் பேசுதல் ... புறங் கூறுதல், விரோதமாய்ப் பேசுதல்" (Robinson, 128). 2 தீமோ. 2:20, 21; எசே. 20:24-27; தீத்து 2:5; 2 சாமு. 11:4, 5, 14-17; 12:13, 14 ஆகியவற்றைக் காணவும். [44]மரியாதையற்றிருத்தல் (Gk.: *kataphroneo*) - "... தாழ்வாக நினைத்தல் ... எவரொருவரையும் கீழ்த்தரமாய்க் கண்ணோக்குதல், இலேசாய் நினைத்தல், இழித்துரைத்தல் ... புறக்கணித்தல், அக்கரையின்றியிருத்தல், ... 1 தீமோ. 6:2" (Robinson, 390). [45]பயன் (Gk.: *euergesia*) - "... நன்கு செயல்படுதல், நன்னடத்தை ... இன்னொருவருக்குச் செய்யப்பட்ட பயன்" (Robinson, 302). [46]Barclay, 141. [47]1 கொரி. 6:19, 20; ரோமர் 12:1; 1 யோவா. 3:16, 17; கலா. 6:2; எபே. 2:8-10; லூக். 9:23 ஆகியவற்றைக் காணவும்.